# நம் வழி வேளாண்மை

பருவம் 25 | ஜனவரி – மார்ச் 2016 | இதழ் 4




நகரம் மாரியப்பனின் கிணற்றில் நீர் தேக்கும் முறை

## *இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம்வழி வேளாண்மை

பருவம் 25 ஜனவரி – மார்ச் 2016 இதழ் 4

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**


**நம் வழி வேளாண்மை தத்துவம்**

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே


**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com


**ஆங்கில இதழ் முகவரி**


Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org


## எந்த இடத்தில் தட்ட வேண்டும் ?

ஒரு பெரிய கப்பலில் இன்ஜின் பழுதாகிவிட்டது. கப்பலுக்கு சொந்தக்காரர்கள் பல மெக்கானிக்குகளை அழைத்து வந்து காட்டினர். இருப்பினும் இன்ஜின் சரியாக இயங்கவில்லை. கடைசியில் ஒரு வயதானவர் சிறு வயதிலிருந்தே கப்பலின் பல பாகங்களை இணைப்பதில் ஈடுபட்டவரை, அழைத்து வந்தனர். இவர் ஒரு பையில் பல கருவிகளை (சுத்தியல் போன்ற வேலை செய்யும் கருவிகள்) பையில் போட்டுக் கொண்டு வந்தார். இவர் இன்ஜினை உற்று ஆராய்ந்தார். இதனை கப்பலின் சொந்தக்காரர்கள் இருவரும் நம்பிக்கையுடன் இந்த முதியவரைப் பார்த்து நின்றனர்.

முதியவர் இன்ஜின் முழுவதையும் ஆராய்ந்த பின் தன்னிடமுள்ள சிறு சுத்தியலை எடுத்தார். இன்ஜினின் ஓரிடத்தில் சுத்தியலால் இலேசாக அடித்தார். இதனால் இன்ஜினுக்கு உடனே உயிர் வந்தது. இயங்க ஆரம்பித்துவிட்டது. வேலை செய்ததற்கு கூலித்தொகையாக ஒரு வாரம் கழித்து ரூ. 10,000 க்கு பில் வந்தது. கப்பல் சொந்தக்காரர்கள் முதியவர் பார்த்த சிறிய வேலைக்கா ரூ. 10,000 என்று கூறி பில்லில் எந்தெந்த வேலைக்கு எவ்வளவு பணம் என்று பிரித்து அனுப்பச் சொன்னார்கள். முதியவரும் பில்லில் சுத்தியல் வைத்து அடித்ததற்கு கூலி ரூ. 2 மட்டும். எந்த இடத்தில் அடிக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு தட்டியதற்கு ரூ. 9998/– என்றும் திருத்தி கொடுத்தார்.

நன்றி : தேனீ: ஜூலை– டிசம்பர் 2015

http://motivatingstory.blogspot.in/search/label/motivational%20stories

## பருவநிலை மாற்றமும் காரணங்களும்

தமிழ்நாட்டில் இவ்வாண்டு கோடை வெப்பம் சுட்டு எடுத்து விட்டது. சராசரி வெப்பத்தைவிட 2 டிகிரி சென்டிகிரேட் வெப்பம் கூடுதலாகிவிட்டது என இந்திய வானியல் துறை கணக்கிடுகிறது. இந்த கூடுதல் வெப்பம் வடமாநிலங்களிலும் ஏற்பட்டது. இந்த வெப்பநிலை கூடுவதற்கு முக்கிய காரணமாக பசுமைக்குடில் வாயுக்களே என்று கூறப்படுகிறது. மனித முயற்சியால் ஏற்படுத்தப்படும் முன்னேற்ற பாதைகள் இந்த வாயுக்களை அதிகளவில் உண்டாக்கி விண்வெளியில் மூடாக்கு போன்று படிந்து உள்நாட்டு வெப்பத்தை கூட்டி விடுகிறது. மீத்தேன், கரியமிலவாயு, நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் பசுமைக்குடில் போன்ற செயற்கை அமைப்பை ஏற்படுத்தி பூமியின் வெப்பத்தைக் கூட்டுகிறது. கால்நடைகளும் இதனோடு கால்நடை பொருட்களை பதப்படுத்தும் நிறுவனங்களும் கூட்டாக சேர்ந்து உலகளவு மனித முயற்சியால் வெளிப்படும் பசுமைகுடில் வாயுக்களில் 18 சதவீதம் என்று வல்லுநர்கள் கணக்கிடுகின்றனர். கால்நடைகள் தீனியை உண்டபின் செரிமானம் செய்யும் நொதிப்பிலிருந்து மீத்தேன் வாயுவும், கால்நடைத் தீவனத்தட்டை வளர்க்க பயன்படும் இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை மூலம் கரியமலவாயுவும், கால்நடை கழிவுகளிலிருந்தும், எரு குப்பைகளிலிருந்தும் நைட்ரஸ் ஆக்ஸைடு வெளிப்படுகின்றன. இது மொத்தமாக 7.1 பில்லியன் டன் கரியமல வாயுவிற்கு இணையானது என்று கணக்கிடப்படுகிறது.

இது தவிர பயிர் சாகுபடி, தொழிற்சாலைகள் வாகனங்கள் மின்சாரம் எடுத்தல் போன்றவற்றால் பசுமைக்குடில் வாயுக்களின் அளவு கூடிக் கொண்டே செல்கிறது. இதனைக்கட்டுப்படுத்த உலகளவில் ஒப்பந்தங்கள் மூலமாக கொள்கையளவில் பருவநிலை மாற்றத்திற்கு முடிவு கட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இரசாயன உரங்கள், இரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகள், இவைகளை கூடுமான வரையில் தவிர்த்தல், சொந்தமாக வாகனங்களின் பயன்பட்டை குறைத்து பொது போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்துதல், மின்சாரத்தை மிச்சம் செய்ய நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஆடம்பர வாழ்வை குறைத்து அத்தியவசியத் தேவைக்காக மட்டும் செலவு செய்தல் இது போன்ற நல்முயற்சிகள் பருவநிலை மாற்றத்திற்கு தீர்வாக அமையும் என்று நம்புவோம். செயல்படுவோம்.

– ஆசிரியர்

## நகரம் மாரிப்பனின் கிணற்றில் நீர் தேக்கும் முறை

(அட்டைப்பட உத்தி)



திருநெல்வேலி மாவட்டம் நகரம் கிராமத்தை சேர்ந்த ஆர்.மி. மாரியப்பன் நிலம் சிறு சிறு குன்றுகளும் மலைகளும் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. இந்த குன்றுக்கு மொட்டை மலை என்று பெயர். இந்த மலைக் குன்றில் பெய்யக் கூடிய ஒவ்வொரு துளி மழை நீரும் வடிந்து மொட்டை மலையைச் சுற்றி அமைந்துள்ள ஆழமான அகழியில் சென்று தேங்குகின்றது. இருபது அடி உயரத்திற்கு மண் கரை எழுப்பியுள்ளார். மொட்டை மலையைச சுற்றிலும் ஆழமான அகழியைத் தோண்டியுள்ளர். தோண்டிய மண்ணைக் கொண்டு கரையை எழுப்பியுள்ளார். கரையைப் பலப்படுத்துவதற்கு இயற்கையாக வளரும் செடி, கொடி, மரங்கள் வளர்த்து கரையை வலுப்படுத்தியுள்ளார். குறிப்பாக கொடிப்பயிர்கள், காட்டு ஆமணக்கு இலந்தை, தேக்கு, கருவேர் ஆகியவற்றை வளர்த்துள்ளார்.

எலுமிச்சை, பல்லாரி, பொத்த மிளகாய், தக்காளி, நாட்டு வெங்காயம், கருவேப்பிலை, தேக்கு, வாழை, செந்தண்டு கீர, தீவனப்புல், பப்பாளி, சீதாப்பழம், கத்தரி, கொய்யா, எள், மல்லிகைப்பூ, சேவல் கொண்டை பூ போன்ற பல்வேறு பயிர்களை இயற்கை விவசாயம் முறையில் வளர்த்து வருகின்றார். பருவ காலங்கள் மட்டுமின்றி எப்போதாவது ஓரிகு நாட்கள் மழை பெய்தால் போதும் மலையைச் சுற்றி ஒரு சிறிய நீர்த்தேக்கம் உருவாகி விடும். அதன் பிறகு மழையே இல்லா விட்டாலும் நிரம்பியுள்ள நீர் இவருக்கு 2 முதல் 3 மாதங்கள் வரை தண்ணீர் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும்.

உபரி நீரை நேரடியாக விவசாயத்திற்கு பயன்படுத்தலாம். அல்லது படத்தில் காட்டியபடி உபரி நீரை கிணறுகளுக்குள் நேரடியாகப் பாய்ச்சி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தலாம் என்கின்றார். ஆர்.மி மாரியப்பன்.

அகழியில் தேங்கியது போக உபரி மழை நீர் அல்லது அதிகப்படியான நீர் வெளியே செல்வதற்கு அகழியின் மேற்புறத்தில் 1/2 அடி விட்டமுள்ள பிவிசி பைப்புகளை பயன்படுத்தி பூமிக்கு அடியில் பதித்துள்ளார். அதாவது

கரையின் மேல் மட்டத்திற்கு சற்று கீழ் (5) பிவிசி குழாய்களை படத்தில் கண்டவாறு புதைத்துள்ளார். பருவ காலங்களில் உபரி நீர் குழாய் வழியாக வெளியேறி கிணற்றுக்குள் பாய்கின்றது. வெறும் மொட்டை மலை, கல், முள் நிறைந்த கரடு முரடான விவசாய பூமி என்று சோம்பி இராமல் தனக்கு கிடைத்த மொட்டை மலையை விலை மதிக்க முடியாத நீர்ப்பிடிப்பு பகுதியாக நம்பத் தொடங்கினார். கையிருப்பில் உள்ள சொற்ப பணத்தையும் தன் உழைப்பையும நம்பினார். அதன் விளைவு தான் இந்த மழை நீர் அகழி. ஒரு சென்ட் பரப்பளவு கொண்ட இத்தகைய மழை நீர் அகழியின் கொள்ளளவு 60 ஆயிரம் லிட்டர் என்று விளக்குகிறார். நகரம் ஆர்.மி. மாரியப்பன். இத்தகைய மழைநீர் அகழிகளை குறைந்த செலவில் அமைக்க ஜே.சி.பி பொக்லையன் இயந்திரத்தை பயன்படுத்தலாம். மழைநீர் அகழி மழை நீர் சேமிப்பிற்றும் மண் அரிப்பை தடுக்கவும் ஏற்றது. இத்தகைய தொழில் நுட்பம் வெள்ளச் சேதத்தைக் குறைக்கவும். வறட்சியைச் சமாளிக்கவும் வழிகோல்கின்றது என்கிறார் நகரம் ஆர்.மி. மாரியப்பன். இந்த பெரும் முயற்சி என்னுடைய கிணற்றுக் மட்டும் அல்ல 1 கிலோ மீட்டர் விட்டத்தில் உள்ள அனைத்து கிணறுகளுக்கும் அதிக நீர் கிடைக்கச் செய்கின்றது என்று பெருமிதம் கொள்கின்றார். ஆகவே இப்பகுதியில் உள்ள விவசாயிகள் மழை நீர் அகழிகள் அமைத்து பயிர் வளர்ச்சிக்கும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும் கூட்டாக முன் வர வேண்டும் என்று விளக்குகிறர்.

ஆர்மி மாரியப்பன்
அன்னை இல்லம், 215–ஏ, வடக்கு தெரு ,
நகரம் – 627 755, கடையநல்லூர் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம்
செல்–9600497706

தொகுப்பு : பி. கோமதிநாயகம், புளியங்குடி

## அடிமட்ட கண்டுபிடிப்பாளர்களின் நிர்வாக குழு கூட்டம்

அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 33வது நிர்வாக குழு கூட்டம் 11–4–2016 ம் தேதி காலை 11 மணிக்கு திருச்சி மாவட்டம், திருவரம்பூர் தாலுகா, அரசங்குடி கிராமத்தில் உள்ள சமுதாயக்கூடத்தில் நடந்தது. இக்கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 10 பேர் உட்பட 44 பேர் கலந்து கொண்டனர். அரசங்குடி பகுதியில் விவசாயம், வைத்தியம் மற்றும் தொழில் நுட்பத்தை தெரிந்து கொள்ளவும் சங்க உறுப்பினர்களின் கண்டுபிடிப்புகளை பகிர்ந்து கொள்ளவும் இந்த கூட்டத்தை நடத்துகிறோம் என்று சேவா நிர்வாக இயக்குனர் திரு. விவேகானந்தன் கூறினார். சுய அறிமுகத்தில் ஒவ்வொருவரும் தமது கண்டுபிடிப்புகளைப் பற்றி விவரமாக எடுத்துரைத்தனர்.

**மரம் ஏறும் கருவி: திரு. வெங்கட்– கோயம்புத்தூர்** தமது கண்டுபிடிப்பான தென்னை மரம் ஏறும் கருவியை பல ஆண்டுகளாக பல மாற்றங்கள் செய்து தற்போது ரூ. 3,500க்கு கிடைக்க கூடிய வகையில் தயாரித்து உள்ளார். தென்னை மரம் வைத்திருப்பவர்கள் மரம் ஏற தெரியாவிட்டாலும் இந்த கருவியை கொண்டு சுலபமாக மரம் ஏறலாம் என்றார். மரம் ஏறுவது செயல் விளக்கம் காட்டப்பட்டது.

**கட்டிலிலே ஆட்டேமெட்டிக் டாய்லட் :** படுத்த கட்டிலை விட்டு மலம் கழிக்கவோ, சிறுநீர் கழிக்கவோ வெளியில் செல்ல முடியாதவர்களுக்கு திரு. சரவணமுத்து – நாகர்கோவில் கண்டுபிடித்துள்ள கட்டிலை பயன்படுத்தி இருந்தபடியே பிறர் துணையின்றி மலம் மற்றும் சிறு நீர் கழிக்கவும் அதை சுத்தம் செய்யவும் முடியும் என்றார். இதன் விலை தற்போது ரூ.75,000 எனவும் உற்பத்தி எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதன் விலை குறையும் என்றார். இதனை ரிமோட் கன்ட்ரேல் மூலம் இயக்கலாம்.



இரவில் மின்சார வெளிச்சத்தில் எழுதி கொண்டிருக்கும் போதே மின்சார தடை ஏற்பட்டாலும் தொடர்ந்து எழுதுவதற்கான பேனா தயாரித்துள்ளதாக கூறினார். கால் துணை கொண்டு தேங்காய் உறிக்கும் கருவியை உருவாக்கியுள்ளார்.

**கைத்தறியில் மின்சாரம் பயன்பாடு**

அக்னிதேவர்– மேட்டுப்பாளையம்: இவர் கண்டுபிடித்த கருவியின் மூலம் ரூ. 3,50,000 மதிப்புள்ள பனாரஸ் பட்டு சேலை ஒன்று நெய்ய 3 பேர் 30 நாள் வேலை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை குறைத்து ஒரு நபர் 3 நாள் வேலை செய்து முடிக்கலாம் என்றார். இதே போல் 2 நபர்கள் 7 நாள் செய்து முடிக்கவும். வேலையை இவர் கண்டுபிடித்த கோர்வை இயந்திரத்தால் 1 நபர் 3 நாள் வேலை செய்து முடிக்க முடியும் என்றார். இவரது கண்டுபிடிப்பான மின்சார பயன்பாடு மூலம் ஆலையின் சத்தம் குறையும் என்றார். இவர் கண்டுபிடித்த கண்டு சுற்று இயந்திரம் 3 இயந்திரம் செய்ய வேண்டிய வேலையை ஒரே இயந்திரம் செய்து முடிக்கும் என்றார்.

**கைரேகை அடையாள அட்டை**

பாலசுப்பிரமணி – கோயம்புத்தூர்:அடையாள அட்டை இன்றி நாடு முழுவதும் சென்று வருவதற்கும், நாம் எந்த இடத்தலிருந்தும் நம்முடைய வசிப்பிடத்தில் உள்ள ஓட்டுரிமையை பயன்படுத்துவதற்குமான ஒரு செயல் திட்டத்தை கூறினார். கைரேகையை வைத்து ஒருவருடைய அடையாள அங்கத்தை பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார்.

**பல்லுயிர் பன்மயம்**

மோகனகிருஷ்ணன் – டி. களத்தூர்: இவர் தனது தோட்டத்தில் 500 வகை மூலிகை செடிகளை வளர்த்து வருவதாக கூறினார்.

**தேய்காய் நெற்று உறிக்கும் கருவி**

கந்தராஜ் – மதுரை இவரது கண்டுபிடிப்பு இயந்திரம் மூலம் 1 நிமிடத்திற்கு 95 தேங்காய் நெற்று உறிக்கலாம் என்றார். இது மோட்டார் மூலம் இயங்கக்கூடியது.

**மின்சார சாக் உண்டாக்காத கருவி**

சிவபிரகாஷம் பழனி: கிரைண்டர், பிரிட்ஜ்ஜை பயன்படுத்தும் போது மின்சார தாக்குதல் ஏற்படாமல் இருக்க கூடிய கருவி ஒன்றை தயாரித்துள்ளதாக கூறினார். மதிய உணவிற்கு பின் வெங்கட் அவர்கள் தென்னை மரம் ஏறும் கருவியை கொண்டு தென்னை மரத்தில் ஏற மக்களுக்கு பயிற்சி கொடுத்தார். கூட்டம் மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

தொகுப்பு : ஜெயபாண்டி, சேவா

## பொத்தவத்தல்–பாரம்பரிய மிளகாய் ரகம்

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியில் பொத்தவத்தல் என்ற பாரம்பரிய மிளகாய் ரகம் பயிர் செய்யப்படுகிறது. இந்த ரகத்தை நகரம் கிராமத்தில் திரு. மாரியப்பன் கடந்த 3 வருடங்களாக பயிர் செய்து வருகிறார். இந்த ரகம் அதிக காரத்தன்மை உடையது. சற்று உருண்டை வடிவம் கொண்டது. இந்த மிளகாய்க்கு ஜீவாமிர்தம் கரைசலை நான்கு தடவை தெளிக்கிறார். ஒவ்வொரு தடவை மிளகாய்க்கு நீர் பாய்ச்சும் சமயம் ஜீவாமிர்த கரைசலை தெளிப்பான் கொண்டு தெளிக்கிறார். வேறு எந்த உரமுமில்லாமல் மிளகாய் செழிப்பாக காணப்படுகிறது. இயற்கை முறையில் விளைந்த மிளகாய் கேரளாவில் எரணாகுளத்தில் கிலோ ரூ.45 க்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் ரூ. 20–30 வரை தான் விலைக்கு வாங்குவார்கள். ஒரு செடியில் 1 கிலோ மிளகாய் கிடைக்கும். ஒரு பாத்தியில் (6x 6அடி) 4 கிலோ மிளகாய் கிடைக்கும்.

இவருக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. 2 கிணறும் 1 ஆழ்குழாய் கிணறும் அமைத்துள்ளார். ஆழ்குழாயில் 10 நிமிடம் மட்டும் ஓடும். பின்னர் நின்று விடும். இவர் ஆழ்குழாயை சுற்றி 40 x 20 அடியில் குட்டை அமைத்து மழை நீர் தேக்கி உள்ளார். இதனால் ஆழ்குழாயில் தண்ணீர் தொடர்ந்து பம்பு செய்ய முடிகிறது. இதனுடைய விளக்கம் பக்கம் 3ல் கூறப்பட்டுள்ளது. இவர் செந்தண்டுகீரை, வெங்காயம், போன்ற காய்கறி பயிர்களை இயற்கை முறையில் சாகுபடி செய்து நேரடியாக பொது மக்களுக்கு விநியோகம் செய்கிறார். இவரை பார்த்து இவரது சகோதரரும் இயற்கை விவசாயம் செய்ய முன் வந்துள்ளார். இவர் புளியங்குடி அந்தோணிசாமியிடமிருந்து இயற்கை வேளாண்மை உத்திகளை பழகிக் கொண்டார்.

வி. மாரியப்பன்
வடக்கு தெரு
நகரம் அஞ்சல்
கடையநல்லூர் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம்
செல் ; 9600497706

தொகுப்பு : விவேகானந்தன், சேவா

# அதிக மகசூல் தரும் பிரதீபா மஞ்சள் ரகம்



திரு. ராமமூர்த்தி (49) ஈரோடு மாவட்டம், சத்தியமங்களத்தில் வசித்து வருகிறார். 10வது வரை படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறார். பல ஆண்டுகள் மஞ்சள் சாகுபடி செய்து குறிப்பாக பல ரகங்களை பற்றியும் அவைகளின் மகசூலையும் அறிந்து வைத்துள்ளார். மகசூல் தரக்கூடிய புதிய ரக மஞ்சள் ''பிரதீபாவை'' அறிமுகம் செய்துள்ளார். மஞ்சள் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தியை மஞ்சள் விவசாயிகள் கூட்டமைப்பு அறிவித்து உள்ளது. ஏக்கருக்கு 35 டன் மகசூல் தரக்கூடிய புதிய ரக மஞ்சள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

மஞ்சள் என்றாலே மங்கலம் என்று பொருள். தமிழரின் பாரம்பரியத்தில், கலாசாரத்தில், இலக்கண, இலக்கியத்தில் அவனது உணவில், உணர்வில், ஆரோக்கியத்தில், மருத்துவத்தில், தனிமனித சுகாதாரத்தில் தனியிடம் பிடித்தது மஞ்சள். சமையலில் பெரும்பங்கு வகிப்பது மஞ்சள் தான். மஞ்சள் மிக சிறந்த கிருமி நாசினி. மஞ்சள் உயிர்காக்கும் மருந்தும் கூட. இந்தியாவில் அதிகளவு மஞ்சள் பயிர் செய்யப்பட்டாலும் தமிழக மஞ்சளுக்கு அதுவும் ஈரோடு, கோவை, திருப்பூர், சேலம், மதுரை, திருச்சி போன்ற மாவட்டங்களில் விளையும் மஞ்சள் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டது என்பதால் இந்த மஞ்சளுக்கு மவுசு எப்போதுமே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. மஞ்சளில் விரலி மஞ்சள், குண்டு மஞ்சள், மரமஞ்சள், காட்டுமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், நாகமஞ்சள், பலாமஞ்சள், குரங்கு மஞ்சள் என பல ரகங்கள் இருந்தாலும் இந்த ஆண்டு மக்களுக்கு ''பிரதீபா'' ரக மஞ்சள் மிக மிக ஏற்றது என்று திரு. ராமமூர்த்தி கூறுகிறார்.

மஞ்சள் விதைகளை தேர்வு செய்யும் முன்பு ஓர் ஏக்கருக்கு சுமார் 4 டன் தொழு உரம் போட்டு பல விதமான பயிர்களை சாகுபடி செய்து தோராயமாக 40 முதல் 45 நாட்களில் மீண்டும் உழவு ஓட்டி 20 முதல் 25 நாட்கள் கழித்து விதை நட்டால் நல்லது. விதை மஞ்சளை தேர்ந்தெடுத்து ஒரு கிலோ மஞ்சள் விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ், நாட்டு மாட்டின் சிறுநீர் அல்லது பஞ்சகவ்யாவில் தண்ணீர் கலந்து 15 அல்லது 20 நிமிடம் ஊற வைத்து பின்பு மஞ்சளை நடவு செய்ய வேண்டும். பல்வேறு புதிய ரக மஞ்சள்கள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளபோதிலும் நம்ம ஊர் மண் வளத்திற்கு ''பிரதீபா'' ரகம் ஏற்றது.

பிரதீபா ரக மஞ்சளானது 32 டன் பச்சை மஞ்சளைக் கொடுக்கும் திறன் படைத்தது. 5 1/2 லிருந்து 6 1/2 டன் வரை மஞ்சள் கிடைக்கும். நூல்புழு தாக்குதல், கிழங்கு அழுகல் நோய், பொறியான், வேர் அழுகல் நோய், கிளை கருகல் நோய் தாக்கா வண்ணம் கடும் எதிர்ப்பு திறன் கொண்டது. அனைத்து நோய் தாக்குதல் மற்றும் பூச்சி தாக்குதலுக்கும் உள்ளாகாது.

ஏக்கருக்கு 850 லிருந்து 900 கிலோ வரை விதை மஞ்சள் போதுமானது. மலைப்பகுதிகள், புஞ்சை மற்றும் நஞ்சையிலும் பயிரிடலாம். மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள் வைகாசி கடைசி அதாவது (மே கடைசி ஜூன் முதல் வாரத்தில்) விதை மஞ்சளை பயிர் செய்வது மிகுந்த மகசூலைக் கொடுக்கும்.

சொட்டு நீர்பாசன முறையைக் கடைபிடிக்கும் விவசாயிகளுக்கு நீர் செலவு அதிகம் ஆகாது. அதோடு பஞ்சகவ்யம், மீன் அமினோ அமிலம், ஜீவாமிர்தம் மற்றும் பாஸ்போபேக்டீரியா, அசோஸ்பைரில்லம், சூடோமோனாஸ் போன்ற நுண்ணுயிர்களையும் சொட்டு நீரில் கலந்து பாய்ச்சி நல்ல மகசூல் பெறலாம். பயிர்களின் இடைவெளியில் மூடாக்கு போடலாம். களைச் செடிகளை பிடுங்கி அதனையும் மூடாக்கு போட்டால் ஈரப்பதம், காற்று, விவசாய கழிவுகள் இவைகள் எல்லாம் நுண்ணுயிர்கள் வேகமாக வளர்ந்து மஞ்சள் கிழங்குகளை நல்ல செழிப்புள்ளதாக ஆக்கும்; அதிகளவு மகசூல் கிடைக்கும்.

மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க மஞ்சள் விவசாயிகள் கூட்டமைப்பு தயராக உள்ளது.

விஎம்.ஆர். ராமமூர்த்தி ,
வி.எம்.ஆர் தோட்டம் , கோம்புபள்ளம்
சத்தியமங்களம் –638 401
ஈரோடு மாவட்டம் ,செல் – 9442352121

## பெருமாளின் குறைந்த விதை நெல் சாகுபடி

மற்ற பல நெல் சாகுபடி முறையில், மிக அதிகமான நெல் விதைகளை பயன்படுத்தும் பயிர் இடைவெளியை நெருக்கி நடவு செய்தால் பூச்சிகள், நோய்கள் எலிவெட்டுதல், போன்றவைகளால் மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது. இது தவிர வறட்சி, காற்று, மழை போன்ற இயற்கை இடர்பாடுகளினால் விளைச்சல் கீழே சாய்ந்து மிகவும் மகசூல் பாதிப்பு ஏற்ப்பட்டு நஷ்டமடைய வாய்ப்புகள் உள்ளது. புதிய குறைந்த விதை நெல் சாகுபடி முறையில் மிகவும் குறைந்த நெல் விதைகளைப் பயன்படுத்தி செலவுகளை குறைத்து மிகவும் அதிகமான இடைவெளியில் நடவு செய்வதால் பூச்சிகள், நோய்கள், எலிகளின் சேதம் அதிகம் இல்லாமலும், வறட்சி, காற்று, மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் விளைச்சல் அறுவடை வரை கீழே சாயாமல் மிகவும் பாதிப்பு ஏற்படாத வகையில் மகசூல் எடுக்க முடியும். நான் இந்த புதிய நெல் சாகுபடி முறையை 2003 முதல் பல வருடங்களாக செய்து வருகிறேன். 2003 லிருந்து இன்று வரை எனது புதிய கண்டுப்பிடிப்பான நெல் சாகுபடி முறையைப்பற்றி அகில இந்திய வானொலிநிலையம், திருச்சிராப்பள்ளி மற்றும் காரைக்கால் எப்எம் ரேடியோவில் ஒலிபரப்பு செய்து வருகிறார்கள். தொலைக்காட்சி மற்றும் அனைத்து வகையான தினசரி பேப்பர்களிலும் வெளியாகி கொண்டு வருகிறது. ஊடகங்கள் மூலமாக தெரிந்து கொண்டு பல ஆயிரக்கணக்கான விவசாயிகளும் வேளாண்மைத்துறை அலுவலர்களும், மற்றும் வேளாண் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளும் நிறைய பேர்கள் எனது வயலுக்கு நேரில் வந்து பார்வையிட்டும் எனது புதிய நெல் சாகுபடி முறைகளைப்பற்றி கேட்டும் தெரிந்துக் கொண்டு சென்ற வண்ணம் உள்ளார்கள். இப்போது எனது புதிய நெல் சாகுபடி முறையை பின்பற்றி பல மாவட்ட விவசாயிகள் சாகுபடி செய்ய துவங்கி உள்ளார்கள். ஆந்திராவில் உள்ள பல விவசாயிகளும் எனது புதிய சாகுபடி முறையை பின்பற்றி சாகுபடி செய்து வருகிறார்கள்.

**ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்ய ஆகும் செலவுகள்,** (விதைப்பு முதல் அறுவடை )

**நடைமுறையில் பெரும்பாலான விவசாயிகள் கடைபிடிக்கும் முறை:** விதை30 கிலோ, விதை விலை ரூ. 1050, நாற்றங்கால் பராமரிப்பு ரூ. 4000, வயல் உழவு ரூ. 3000, சமன்படுத்துதல் ரூ. 3000, நடவு ரூ. 2250, உரம் ரூ. 2000, களை ரூ. 1500, பயிர் பாதுகாப்பு ரூ. 1500, அறுவடை ரூ.2000. மொத்தம் ரூ. 20,300.

**இயந்திர நடவு முறை செய்யும் விவசாயிகள்:** இவர்களுக்கு விதை செலவு, நாற்றங்கால் பராமரிப்பு செலவு கிடையாது. வயல் உழவு ரூ. 3000, சமன்படுத்துதல் ரூ.3000, நடவு ரூ.6000, உரம் ரூ. 2000, களையெடுப்பு ரூ. 2000, பயிர் பாதுகாப்பு ரூ.1500, அறுவடை ரூ.2000. மொத்த செலவு ரூ.19500.

**எஸ்.ஆர்.ஐ. நடவு அனுசரிக்கும் விவசாயிகள்:** விதை 2 கிலோ, விலை ரூ. 70, நாற்றங்கால் பராமரிப்பு ரூ.2000, வயல் உழவு ரூ.3000, சமன்படுத்துதல் ரூ.3000, நடவு ரூ.2250, உரம் ரூ.2000, களையெடுப்பு ரூ.2000, பயிர் பாதுகாப்பு ரூ.1500, அறுவடை ரூ.2000. மொத்தம் ரூ 17820.

**பெருமாளின் குறைந்த விதை நெல் சாகுபடி:** விதை 1/2 கிலோ, விலை ரூ. 18, நாற்றங்கால் பராமரிப்பு ரூ.700, வயல் உழவு ரூ.3000, சமன்படுத்துதல் ரூ.3000, நடவு ரூ.1200, உரம் ரூ.1500, களைக்கு ரூ.1000, பயிர் பாதுகாப்பு ரூ.1000, அறுவடை ரூ.2000. மொத்த செலவு ரூ.13418.

**பெருமாள் சாகுபடி முறையை கடைபிடிப்போர்:** சம்பத்குமார், திருச்சி, செல் – 9488475471, ஜெயராமன் , ஆதிரெங்கம், செல் – 9443320954, முத்துகிருஷ்ணன், காரைக்கால், செல் – 9443484978, ராஜ்குமார், மயிலாடுதுறை, செல்– 9962009302, ரெங்கநாதன், பாளையூர், செல் – 9443346369, அசோகன், நாகமசேரி, செல்– 9442724537, பச்சையப்பன், திருவண்ணாமலை, செல்– 9942975866, முத்து, கதிரமங்கலம், செல் – 8526233015, பாஸ்கர், கும்பகோணம், செல் – 9442871049.

ஆர். பெருமாள்
த/பெ. ரெங்கராஜ்
34, ஆலங்குடி அஞ்சல், குத்தாலம் தாலுகா
நாகப்பட்டிணம் மாவட்டம் – 609 901
செல்– 9486835547, 9486525672

## கால்நடை மருத்துவ பயிற்சி முகாமில் தொகுக்கப்பட்ட உத்திகள்

பாண்டிச்சேரி ஆரோவில் நிறுவனம் மூலம் மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு கால்நடை பராமரிப்பு பயிற்சி அக்டோபர் 2015 கொடுக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட கிராமப்புற பெண்கள் தங்களுக்கு தெரிந்த பாரம்பரிய வைத்திய முறைகளை எடுத்து கூறினர்.

மாடுகளுக்கு காய்ச்சல் வந்தால் உத்தாமணி, வேலிபருத்தி, மாடுகளுக்கு கழிச்சல் ஏற்பட்டால் கேழ்வரகு, பனைவெல்லம், தண்ணீர் தெளித்து உருண்டையாக தருதல் – வெங்கடேஷ் திருவாரூர் மாடு, ஆடு வாய்ப்புண் வந்தால் கஸ்தூரி மஞ்சள் அரைத்து நல்லெண்ணை கலந்து புண் பகுதியில் தடவ வேண்டும் விரைவில் குணமாகும்.

– ரீட்டா, திருவள்ளூர்

கோமாரிக்கு வேப்பெண்ணெய், நல்லெண்ணை கலந்து கொதிக்க வைத்து கற்பூரம் கலந்து ஆற வைத்து அதை தடவ குணமாகும்.

– ராஜராஜேஸ்வரி, திருவண்ணாமலை

மாட்டிற்கு உண்ணி இருந்தால் சீதாபழம் அரைத்து தடவ வேண்டும். உண்ணி கொட்டிவிடும்

–– மாலா, திருவள்ளூர்

மாடு, ஆடு வயிறு உப்பசமாக இருக்க இட்லி சோடா அல்லது வீட்டு ரசம் ஊற்ற குணமாகும்.

–– ரஞ்சிதா, திருவள்ளூர்

கால்கோமாரிக்கு நிலக்கடம்பு தழையையும், மஞ்சள், கற்பூரம் கலந்து தடவ வேண்டும்.

––வாசுகி, திருவண்ணாமலை

மடிவீக்க நோய்வந்தால் 24 மணி நேரத்துக்குள் சாக்பீஸ் தூளாக்கி எலுமிச்சை சாரை கலந்து தடவ வேண்டும். தடவினால் குணமாகும்.

–– நாகராஜன், திருவள்ளூர் மாவட்டம்

கால்கோமாரி ஏற்படும் போது வாய்கோமாரி:

வேப்பஎண்ணெயுடன் கற்புரம், மஞ்சள் தூள் சேர்த்து கால் குளம்பில் வைத்த பிறகு சில மணி நேரம் கழித்து வெந்நீர் விட்டு காலை கழுவவேண்டும். நிலக்கடம்பு இலையை அரைத்து மஞ்சள் தூள் கலந்து சிறிது கற்பூரம் சேர்த்து வைத்துக் கட்டினால் வெட்டுக்காயம் வாய்கோமாரி புண்ணுக்கு தடவினால் நன்றாக குணமடையும். வாய் கோமாரி ஏற்படும் போது வழைப்பழம் உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். அடுத்து பச்சரிசி கஞ்சி காய்ச்சி ஆற வைத்து உள்ளுக்குள் கொடுத்தால் குணமாகும்.

வயிற்றுவலி ஏற்படும் போது : புளி, மிளகு, உப்பு, இடித்து நீர் விட்டு காய்ச்சி ஆற வைத்து உள்ளுக்குள் கொடுத்தால் வயிற்று வலி குணமடையும். முருங்கை இலை எடுத்து இடித்துக் அதில் உப்பு கொஞ்சம், பெருங்காயம் சிறிதுளவு எடுத்து கலக்கி உள்ளுக்குள் கொடுத்தால் குணமாகும்.

கன்றுக்குட்டி போட்ட பிறகு உறுப்பு வரவில்லையென்றால் : எள்ளுச் செடியை எடுத்து வந்து இடித்து தேவையான அளவு உள்ளுக்குள் கொடுத்தால் வெளியில் உறுப்பு வந்து விடும். வெண்டைக்காய் இடித்து கொடுத்தாலும் உறுப்பு வெளியேறும்.

**கண்ணில் அடிப்பட்டால்**

வெற்றிலை பாக்கு எடுத்து மென்று கண்ணில் விட புண் விரைவில் குணமாகும். காட்டுவா இலையை இடித்து சாறு எடுத்து கண்ணில் இரண்டு சொட்டு விட்டால் குணமாகும்.

தொகுப்பு : செல்வி, சொர்ணகாடு

## டி.ஆர்.கே. புதிய நெல் ரகம்

இந்த புதிய நெல் ரகத்தை மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள தாதாஜி ராமாஜி கோப்ரகடே என்ற விவசாயி உருவாக்கியுள்ளார். தீபிகா ரத்னா என்ற நெல்லிலிருந்து தரமான கதிர்களைத் தேர்வு செய்து 1998 ல் பரிசோதித்தார். 6 ஆண்டுகளுக்குப்பின் சுமாரான உயரம், கதிர் நீளம், சீதோஷ்ண நிலைக்கு தாக்கு பிடித்தல் போன்ற அம்சங்களை கொண்டதாக தேர்வு செய்து உருவாக்கினார்.

**நெல்ரகத்தின் தனித்தன்மைகள்**

விளைச்சல் – 25–30 குவிண்டால் / ஏக்கருக்கு, ஒரு நெற்பயிருக்கு 6–10 கதிர்கள், சுமாரான உயரம் 130 செ.மீ கொண்டது. கதிர் நீளம் 22 செ.மீ. அரிசி வெள்ளை நிறம் கொண்டது. வயது 140 நாட்கள், சன்னரகம், ருசியானது. சீதோஷ்ண காரணிகளுக்கு தாக்குப்பிடிக்கும்.

(இந்த இரகத்தை 3 கிலோ தருவித்து தமிழ்நாட்டில் சில விவசாயிகளுக்கு மட்டும் தர முடிந்தது. – ஆசிரியர்)

Dadaji Ramaji Khobragade
Nanded
Nagbhid Taluka
Chandrapur District
Maharashtra - 441221
Ph - 7926732456

## பலா மரகன்றுகள்

பலா மரத்தில் நல்ல மகசூல் தரும், ருசியான, சிவப்பு நிறமும் கொண்ட சுளைகள் உள்ள எல்லா பருவங்களிலும் காய்க்கும் ஒட்டுக்கன்றுகள் நின்னிகல்லு நாற்றங்காலில் கிடைக்கிறது. கன்று விலை ரூ. 200/– இந்த நாற்றங்காலை உருவாக்கியவர்



திரு. அனில்குமார். இவரை ஜேக் அனில் (jak anil) என்று அழைப்பர். பல நகரங்களுக்கு சென்று கண்காட்சியில் கலந்து கொண்டு விற்பனை செய்து வருகிறார்.

அனில் குமார்
நின்னிகல்லு நர்சரி, புத்தூர், கர்நாடகா
செல்: 9448778497

## சொட்டு நீர் குழாயில் உப்பு படிவதைத் தவிர்க்க

நிலத்தடி நீரின் தரம் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. உப்புநீராக உள்ள நீரின் தன்மையை மாற்ற இயற்கையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது சிறந்தது. நீர்பாய்ச்சும் . சொட்டு நீர் குழாயில் உப்பு படிந்து விடுகிறது. உப்பு படிவதை கரைக்க நீர்த்த ஹைட்ரோகுளோரிக் அமிலம் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு பதில் இயற்கையான நுண்ணியிர்களைப் பெருக்கி உப்பு படிவதைத் தவிர்க்கலாம். இதற்கு “இ.ம்.2'' என்ற கரைசலை (லேக்டிக் அமில பாக்டீரியா, யீஸ்ட் பாக்டீரியா, ஒளிச்சேர்க்கை பாக்டீரியா நுண்ணியிர்கள் அடங்கியது) 1 லிட்டர் ஸ்டாக் கரைசலை 20 லிட்டர் நீரில் கலந்து 1 கிலோ நாட்டு சர்க்கரை, 10 கிலோ அழுகிய பழங்கள் போட்டு 3–4 நாட்கள் அப்படியே புளிக்க வைத்து விட வேண்டும். இது 10 மடங்காக பெருகிவிடும். இந்தக்கரைசலை வடிகட்டி பாசன நீரில் கலந்து விடும் சமயம் உப்புபடிதலை கரைத்து விடுகிறது.

திரு.சுந்தரராமன்
கோம்புபள்ளம் தோட்டம்
சத்தியமங்கலம், கெஞ்சனூர் வழி,
ஈரோடு மாவட்டம்– 638 401, செல்: 9842724778

## கலப்பை ஏந்தும் இராணுவ வீரர்

விவசாயத்திற்கு நீர் வடிப்பகுதி வேளாண்மை அவசியம் என்பதை முன்னாள் இராணுவவீரர் நகரம் மாரியப்பன் நமக்கு ஒரு விழிப்புணர்வை ஊட்டுகின்றார். நகரம் என்று அழைக்கப்படும் அந்த குக்கிராமத்தில் மக்கள் ஆர்மி. மாரியப்பன் என்று அன்போடு அழைக்கின்றனர். மலை, முகடுகள், சரிவான பகுதிகளின் வழிந்தோடும் மழை நீர், தாழ்வு பகுதிக்கு சென்று வீணாகிறது. இந்த நீரைத் தடுத்து அந்தந்த பகுதியில் தேக்கம் செய்தும் பூமிக்குள் செலுத்தப்பட்டும், நிலத்தடி நீர் வளம், மண் வளம், மரம் செடி கொடிகளின் வனத்தை பாதுகாத்து வருகின்றார். புளிங்குடி, திருமலைநாயக்கன் புதுக்குடி, முள்ளிக்குளம், இருமங்குளம், தாகுகாபுரம், வடநத்தம்பட்டி வட்டாரங்களில் எண்ணற்ற வடி நிலப் பகுதிகள் உள்ளன.

காட்டாறுகள் ஓடைகளின் குறுக்கே சிறு சிறு தடுப்பணைகளை கட்டுவதன் மூலம் நிலத்தடி நீரை உயர்த்தலாம் என்று திரு. மாரியப்பன் தெரிவிக்கின்றார். ஊருணியை தூர் வாரியும் கரைகளை பலப்படுத்தியும் வீணாய் ஓடும் மழை நீரை அதிகபட்சம் சேமிக்கலாம் என்றும் நம்புகிறார்.

இவர் தானே முயன்று பெரும் சுவர் போன்ற நீண்ட தடுப்பணைகளை தன் தரிசு நிலத்தை சுற்றி சரிவான அளவில் சரியான சரிவில் தடுப்புக் கரைகளை எழுப்பிள்ளார். வறட்சியான காலகட்டங்களில் பெய்த ஒரு நாள் மழையில் தண்ணீர் தேங்கி நிரம்புகின்றது. மேட்டுப்பாங்கான சரிவிலிருந்து ஓடி வீணாகும் தண்ணீர் இந்த தடுப்பணைகள் ஓடோடும் மழை நீரை நிறுத்தி நிரப்பச் செய்கின்றது. இப்போது பெரும்குளம் போன்று காட்சி அளிக்கின்றது. இந்த தடுப்பணை கொண்டு எலுமிச்சை மரங்களை மேலும் செழிப்பாக்குவேன் என்று நம்பிக்கையோடும் அடக்கத்தோடும் கூறுகிறார்.

தடுப்பணை கட்டுவதால் தேங்கும் தண்ணீர் தனது கிணறு மட்டுமல்லாது சுற்று வட்டாரத்தில் இருக்கும் உழவர் கிணறுகளின் ஊற்றையும் அதிகப்படுத்தும்.

போட்டி போட்டுக் கொண்டு கிணறுகளை ஆழப்படுத்தும் அக்கம் பக்கத்து விவசாயிகளுக்கும் ஆர்மி. மாரியப்பனின் நல்லெண்ணம் நம்மை மெய் சிலிக்க வைக்கின்றது.

இந்த வட்டாரம் முழுவதும் இது போன்ற நீர் வடிப்பகுதி மேலாண்மையை மேற்கொள்ளும் பொழுது அந்தந்தப் பகுதிகளில் தண்ணீர் தேக்கியவுடன் மண் அரிப்பும் தடுக்கப்படுகின்றது என்ற விழிப்புணர்வை நமக்கு வெளிப்படுத்துகின்றார். ஜீவாமிர்த கரைசலை தானே சொந்தமாகத் தயாரிக்கின்றார். வட்டார விவசாயிகளுக்கு கொடுத்து வருகின்றார். தரமான வெள்ளரி விதைகளை விநியோகம் செய்கின்றார். இலவசமாக கருவேப்பிலைக் கன்றுகளை வழங்குகின்றார். ஆடுகளை பேணி வளர்ப்பதில் இவருக்கு ஈடு இணையாக யாரும் இருக்க முடியாது. கரடு முரடான அவர் தம் மானாவாரி விவசாய நிலத்தில் பசுமையான தீவனப் புற்கள் செழித்தோங்கி நிற்கின்றன. காரம் மிகுந்த காட்டு மிளகாய் இரகங்களை இன்னும் பாதுகாத்து வருகின்றார்.

புளியங்குடி– சங்கரன் கோவில் பிரதான சாலையின் அருகே இவரது இயற்கை விவசாயப் பண்ணை அமைந்துள்ளது. குன்றுகளும், மேட்டு பகுதிகளும், சரிவுகளும் பாறாங்கற்களும் நடுவே இவரது புஞ்சை சாகுபடி, துப்பாக்கி ஏந்திய கைகளை விட கலப்பையை ஏந்திக் கொண்டுள்ள கைகள் மூலம் இன்னும் சாதிக்க முடியும் என்று நம்புகின்றார். இயற்கையின் சவால்களை புதிய விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்கள் கொண்டு ஏனைய விவசாயிகளுக்கு முன்னேடியாகத் திகழ்கின்றார்.

தரிசு நிலத்தில் வழிந்து ஓடும் நீரை சேகரிக்க தடுப்பணைகள் உதவுகின்றன. இதனால் குட்டைக்கு கீழ் உள்ள கிணறுகளுக்கு அதிக நீர் கிடைக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். இந்த தடுப்பணைகளினால் சுமார் 1 கி.மீ தூரத்தில் சுற்றி உள்ள கிணறுகளில் நீர் மட்டம் கூடி இருக்கும். தடுப்பணையினால் எலுமிச்சை மரங்கள் வறட்சியிலிருந்து மீள்கின்றன.

ஆர்மி மாரியப்பன்
அன்னை இல்லம்
215, ஏ வடக்கு தெரு
நகரம் – 627 755
கடையநல்லூர் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம். செல்– 9600497706

தொகுப்பு : கோமதிநாயகம், புளியங்குடி

## ஏர் கம்ப்ரஸ்ஸர் மூலம் ஜக்காடு பெட்டியை இயக்குதல்

கைத்தறி நெசவில் ஜக்காடு பெட்டி மூலம் பலவகையான டிசைன்கள் எளிதாக போட முடிகிறது. அதே சமயம் ஜக்காடு பெட்டியை இயக்க கால் வைத்து பெடலை மிதிப்பது கடினமாக இருக்கும். இதனால் மூட்டு வலி வந்து விடும். இதற்கு கம்ப்ரெஸ்ஸர் மூலம் மிஷினை இயக்கினால் மிதிப்பது சுலபம். கம்ப்ரெஸ்ஸரில் உற்பத்தியாகும் காற்றை ஏர்பம்பின் மூலமாக செலுத்தி ஜக்காடு பெட்டியை இழுப்பதற்கான சக்தி உருவாக்கப்படுகிறது. இதனால் மனித ஆற்றல் 25 சதவீதம் போதுமானது. இந்த அமைப்பை உருவாக்க ரூ. 40,000 செலவாகும். 8 மணி நேரத்தில் 3 சேலை நெய்யப்படும் நேரத்தில் 6 சேலைகளுக்கு மேலாக இந்த புதிய அமைப்பில் நெய்யலாம்.

ஏ. தனசேகரன்
167/50 டி. பள்ளிக்கூடத்தெரு, ஆரணி – 632 301
திருவண்ணாமலை மாவட்டம், செல் : 9360633447

## நாட்டு இன பசுக்களை இனப்பெருக்கம் செய்தல்

நமது நாட்டு பசு இனங்களில் பால் அதிகம் தரும் பசுக்களை வளர்க்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பால் அதிகம் தரும் பசு இனங்களான கிர், ரெட் சிந்தி, தர்பார்க்கர், சாஹிவால் வட நாட்டிலிருந்து தருவிக்கப்பட வேண்டும். இதற்கு பணமும் நேரமும் அதிகம் ஆகும். இதற்கு பதில் இந்த நாட்டு ரக காளைகளின் விந்துவை சினை ஊசி போட்டு இனப்பெருக்கம் செய்யலாம். தமிழ்நாட்டில் சேலம், ஈரோடு, கோவை, திண்டுக்கல் கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஊத்தங்கரை, புதுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மதுரை, தேவகோட்டை, சாத்தூர், மேலூர், வெள்ளாளபட்டி பகுதிகளில் நாட்டு பசு இன விந்துகள் கொண்டு செயற்கை முறை கருவூட்டத்திற்கு அனுபவமிக்க கால்நடை மருத்துவர்கள், பயிற்சி எடுத்த இளஞர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இளைஞர்களுக்கும் செயற்கை முறை கருஊட்டத்திற்கு பயிற்சியும் கொடுக்கப்படுகின்றது. இந்தப்பணியை தஞ்சாவூர் ஸ்ரீ பாலாஜி ஏஜென்ஸீஸ் செய்து வருகின்றனர்.

என். பாலாஜி
என். 7 கல்யாண் நகர், முனிசிபல் காலனி ரோடு ,தஞ்சாவூர்– 613 007, செல்– 9940756878 , 9940759379

## மூலிகைப்பூச்சி கொல்லி மருந்து, இயற்கை வேளாண்மை மேம்பாட்டு கருத்தரங்கம்


Workshop on Sustaining Botanical Pesticides through Innovation and Enterprise Development during May 24-25, 2016 at IIM Ahmedabad

குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் மே மாதம் 24,25, 2016 தேதிகளில் மூலிகைப்பூச்சி கொல்லி மருந்து மற்றும் இயற்கை வேளாண்மை மேம்பாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. இதனை தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை, சிருஷ்டி, பயோடெக்னாலாஜி துறை, பூச்சி கொல்லி மருந்து தயாரிப்பு நிறுவனம், (IFG) இந்திய மேலாண்மை நிறுவனம், அஹமதாபாத் (IIM-A) இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இதில் இயற்கை வழி வேளாண்மை கடைபிடிப்போர், பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்போர், வல்லுநர்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிலிருந்து மூலிகை பூச்சிக் கொல்லி மருந்து, பஞ்சகவ்யா தயாரிப்பாளர் கருக்கம்பாளையம் செல்லமுத்து, கேரளாவில் இராஜகுமாரியிலிருந்து ஏலத்தோட்டத்திற்கு மூடாக்கு உத்தியை கடைபிடிக்கும் திரு. பவுலாஸ், டாக்டர். வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாதவ்பிரசாத்
தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை
அஹமதாபாத்
Email- madhavap@gmail.com

## மோர்– ஓர் ஆரோக்கிய பானம்

மோரில் கால்சியம், மக்னீசியம், பாஸ்பரஸ் ஊட்டங்கள் உள்ளன. இதில் நீரில் கரையும் வைட்டமின்கள் அதிகளவு வைட்டமின் பீ–12 உள்ளது.

## பண்ணைகுட்டை மூலம் கோடை உளுந்து



நாகபட்டிணம் மாவட்டத்தில் கீளவேளூர் பகுதியில் வேளாண் பொறியியல் துறை மூலம் பண்ணை குட்டை அமைக்க மானியம் தரப்படுகிறது. விவசாயிகள் பங்களிப்பாக ரூ.6000 கட்ட வேண்டும். ரூ. 40,000 செலவில் ஜெ.சீ.பி மூலம் பண்ணை குட்டை உருவாக்கப்படுகிறது.

தற்சமயம் புரட்டாசி–ஐப்பசியில் ஆற்று நீர் கொண்டு நெல்பயிரிடுவதால் சில வருடங்களில் ஆற்றுநீர் பற்றாக்குறையினால் கடைசியில் பயிர் காய்ந்து விடும். பயிர் விளைந்தாலும் வரவு செலவு கணக்குப்பார்த்தால் நெற்பயிர் சாகுபடியில் வருமானம் குறைவாகும்.

இதற்கு பதில் கோடையில் ஒரே போகம் உளுந்து மட்டும் பண்ணைகுட்டை / மழை நீர் கொண்டு விதைத்தால் 10 குவிண்டால் ஏக்கருக்கு எடுக்கலாம். செலவு குறைவு. வருமானம் ரூ.80,000ஐ தாண்டும். சிரமம் இல்லை. எனவே ஆற்று நீரை நம்பி நெல் சாகுபடி செய்து நஷ்டப்படாமல் வயலை தரிசாக விட்டு கோடையில் மட்டும் உளுந்து பயிரிட்டு நல்ல லாபம் எடுக்கலாம். இதற்கு பண்ணைகுட்டை அவசியமாகும்.

ஜீவானந்தம்
கணபதி, நான்குடி
கீளவேளூர் – 611104
செல்– 9443375262
நாகபட்டிணம் மாவட்டம்

(இது நல்ல திட்டம். ஆனால் அதிகாரிகளுக்கு ஒரு பண்ணை குட்டைக்கு ரூ. 15000 வரை கொடுத்து சரிகட்ட வேண்டும் என்று விவசாயிகள் கூறி வருகின்றனர்– ஆசிரியர்).

## ஏலம்மாளின் கால்நடை வைத்தியம்



மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் சென்னகரம்பட்டி எனும் கிராமத்தில் திருமதி. ஏலம்மாள் (55) வசித்து வருகிறார். இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு சொந்தமாக 1 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் கரும்பு, வாழை மாற்றும் காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் 1 கறவை மாடு, 10 நாட்டுக்கோழி, 1 நாய் பராமரித்து வருகிறார். தனது அம்மா திருமதி. காத்தியிடம் கால்நடை மூலிகை வைத்யத்தை கற்றுக் கொண்டார். இவரது கால்நடை மூலிகை வைத்திய முறைகள் பின்வருமாறு:

### ஆடு கழிச்சலுக்கு

ஆவார இலை – 1 கைப்பிடி, தை வேளை–1 கைப்பிடி, தலைச்சுருளி – 1 கைப்பிடி, சீரகம் – 10 கிராம், முருங்கை இலை – 1 கைப்பிடி, பெருங்காயம் – 20 கிராம். மேற்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுக்கவும். இதனை ஆட்டிற்கு 20 மி.லி, மாட்டிற்கு 50 மி.லி வீதம் இரண்டு வேளை கொடுக்கவும்.

### ஆடு, மாடு இரை தின்னாமலிருந்தால்

தைவேளை– 1 கைப்பிடி, சீரகம்– 10 கிராம், சின்ன வெங்காயம்– 20 கிராம், மிளகு– 10 கிராம், பூண்டு – 10 கிராம். மேற்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுக்கவும், இதனை ஆட்டிற்கு 20 மி.லி, மாட்டிற்கு 50 மி.லி வீதம் இரண்டு வேளை கொடுக்கவும்.

### மாடு கழிச்சலுக்கு

முடக்காத்தான் இலை – 1 கைப்பிடி, மிளகு– 10 கிராம், பூண்டு – 10 கிராம், சீரகம் – 10 கிராம். மேற்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுக்கவும். இதனை மாட்டிற்கு 50 மி.லி வீதம் இரண்டு வேளை கொடுக்கவும்.

### ஆறாத புண்ணுக்கு

சீரகம்– 10 கிராம், நாயுருவி இலை – 1 கைப்பிடி, சுக்கு – 10 கிராம், சின்ன வெங்காயம் 10 கிராம். மேற்கண்ட அனைத்தையும் சேர்த்து அரைத்து பசைபோல் செய்து புண், காயம் உள்ள இடத்தில் தடவவும். பின்னர் வெள்ளைத்துணி கொண்டு கட்டவும். பிறகு 3 நாட்கள் கழித்து கட்டைப்பிரிக்க வேண்டும்.

### ஆடு, மாடு செரிமானக்கோளாறுகளுக்கு

முருங்கை இலை – 1 கைப்பிடி, வெற்றிலை – 5 எண்ணம், ஓமம்– 10 கிராம். மேற்கண்ட அனைத்தையும் சேர்த்து அரைத்து ஒரு எலுமிச்சம்பழம் அளவு உருண்டையாக்கி மாட்டிற்கு கொடுக்கலாம். ஆட்டிற்கு பாதி அளவு கொடுக்கலாம்.


க.ஏலம்மாள்<br>
க/பெ. ப. கரந்தன்<br>
கதவு எண். 173<br>
சென்னகரம்பட்டி அஞ்சல்<br>
கீழப்பட்டி<br>
மேலூர் தாலுகா<br>
மதுரை மாவட்டம்– 625106<br>
செல் – 7868064594


## அத்திமரத்தில் கிரீடம்

அத்திமரம் கோயிலில் காணப்படும் ஸ்தல விருட்ச மரமாகும். அத்தி மரத்தில் இறைவன் இருப்பதை பாரம்பரியமாக மக்கள் நம்புகின்றனர். அத்தி மரத்தில் இறைவனின் கிரீடம், முகமூடி செய்து விழாக் காலத்தில் அணிகின்றனர். மற்ற நாட்களில் இந்த முகமூடிகளை பூஜை அறையில் வைத்து வழிபடுகின்றனர். நரசிம்ம மூர்த்தி ஜெயந்தி விழா சாலியமங்கலம் கிராமத்தில் வைகாசி மாதம் கொண்டாடப்படுகிறது. விழா அன்று நரசிம்ம மூர்த்தி நாடகம் நடைபெறும். அதில் நரசிம்ம மூர்த்தியாக நடிப்பவர் முகமூடி அணிந்தவுடன் சாமியிறங்கி ஆக்ரோஸமாக ஆடுவார். இது பார்ப்பதற்கு சற்று பயங்கரமாக இருக்கும். இறைவன் எங்கும் எதிலும் இருப்பது இதன் மூலம் நிரூபணம் என்று இவ்வூர் மக்கள் நம்புகின்றனர். இவ்வாறு ஆடுபவர் ஹிரண்ய கசிபுவாக நடிப்பவரை அடித்து கொல்லப்படலாம் என்று நரசிம்ம மூர்த்தியாக நடிக்கும் நபரை இறுகப் பிடித்துக் கொண்டு இருப்பார்கள். இந்த நாடகம் கடந்த 350 ஆண்டுகளாக இவ்வூரில் நடைபெற்றுவருகிறது.

–திரு. வெங்கடகிருஷ்ணன் சாலியமங்கலம், தஞ்சாவூர்

## மினி டிராக்டரில் வரப்பு, பாத்தி போடும் கருவி



மினி டிராக்டரில் பொருத்தப்படும் வரப்பு, பாத்திபோடும் கருவியை வெங்காயம், மஞ்சள், மரவள்ளி, பருத்தி, காய்கறிகள் பயிரிட பயன்படுத்தலாம். இதில் விதைக்கும் விதைப்பான் அமைப்பையும் பொருத்தலாம். இதனை வடிவமைக்க ரூ.16,000 செலவாகும்.

ஜே.ஆர். தன்ராஜ்
பெரியப்புகாடு, கல்குறிச்சி அஞ்சல்,
பேலுக்குறிச்சி வழி, நாமக்கல் மாவட்டம் – 637402

## ஆகாய வெள்ளரி (Passiflora quadrangularis)

வெள்ளரிச் செடி தரையில் படர்ந்து வெள்ளிரிக்காயைக் கொடுக்கும். ஆகாய வெள்ளரி இனச்செடி பந்தலில் படர்ந்து புடலங்காய் செடி போல காய்களைக் காய்க்கும். இதனை கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் சில விவசாயிகள் தோட்டத்தில் பயிரிட்டுள்ளனர். இது பாஸ்ஸன் பழம் (Passion fruit) இனத்தைச் சார்ந்தது. ஒரு கொடியில் 70 பழங்கள் காய்க்கும். ஆகாய வெள்ளரிக்காய்யை பச்சையாக வெள்ளரிக்காய் சாப்பிடுவது போல் சாப்பிடலாம். பழத்தை ஜாம், புருட் சாஸ், ஐஸ்கிரீம், ஜூஸ் செய்து சர்க்கரை சேர்த்து பானமாக அருந்தலாம். இது நட்ட 4–5 மாதங்களில் காய்ப்பிற்கு வரும். இந்த ஆகாய வெள்ளரிபழத்தை சாப்பிட்டு வர நரம்புத்தளர்ச்சி, ஆஸ்த்மா, வயிற்றோட்டம், தூக்கமின்மை போன்ற வியாதிகளுக்கு நிவாரணம் கிடைக்கும்.

அன்னக்குட்டிஜோசப்
வாத்திகுடி, இடுக்கி மாவட்டம்
கேரளா
செல்: 9447982459

## கைத்தறியில் பட மரம் கப்ளிங், ரோல்கப்ளிங்



திருவண்ணாமலை மாவட்டம் சைதாபோட்டையில் திரு.சந்திரன் (70) 7 வயதிலிருந்தே நெசவுத் தொழில் செய்து வருகிறார். சிலர் நெசவுத் தொழிலை விட்டு சாதாரண கூலித் தொழிலாளர்களாக மாறுவதை பார்த்து அவர்களை மீண்டும் நெசவுத்தொழிலுக்கு திருப்புவதே நல்லது என்று இளைஞர்களுக்கு ஆலோசனை கூறுகிறார். வீட்டிலிருந்து கொண்டே மாதம் ரூ. 6000/– எளிதில் சம்பதிக்கலாம் என சொல்லி வருகிறார்.

கைத்தறியில் நெய்த சேலையை சுற்றி வைக்க படமரம், ரோல் மரத்தைப் பயன்படுத்துவார்கள். இந்த மரத்தை சுற்றுவதற்கும் பின் திரும்ப வராமலிருக்க / நிறுத்த வீட்டு சுவரில்/தரையில் துளைபோட்டு அதில் மரக்குச்சியை தாங்க வைப்பர். இது அவ்வளவாக



இறுக்கமாக இருக்காது. படமரம் தேயவும் செய்யும். பட மரத்தில் 4 பட்டையும் ரோலரில் 8 பட்டையும் காணப்படும். பட மரத்தை அல்லது ரோலரை நேராக வைத்து நிறுத்த இரும்பு கப்ளிங் முறையை சந்திரன் உருவாக்கியுள்ளார். இதில் பல்சக்கரம் இருக்கும். இதனால் ஒரு இரும்பு கொக்கியை சொருகி நிறுத்த முடியும். இதில் மரம் தேயாது. இந்த முறையில் 4 சேலை நெய்யும் நேரத்தில் 5 சேலைகள் நெய்ய இயலும். இந்த உத்தியை கடந்த 5 வருடங்களாக சுமார் 1000 தறிகளில் திரு. சந்திரன் பொருத்தியுள்ளார். இந்த கப்ளிங்கை பொருத்த ரூ. 200 மட்டுமே செலவாகும்.

டி. சந்திரன்
25/67, மேட்டுத்தெரு
சைதாப்பேட்டை, ஆரணி
திருவண்ணாமலை மாவட்டம்
செல்: 9659480159

## கைத்தறி ஜக்காடு பெட்டி இயக்கும் இயந்திரம்

கைத்தறி நெசவில் ஜக்கார்டு பெட்டியின் எடை 30 கிலோவிற்கு அதிகமாயிருக்கும். காலை பெடலில் மிதித்து நெசவு செய்யும் பொழுது நெசவாளர்கள் மிகவும் சிரமப்படுவர். இதனால் மூட்டுவலி, இடுப்புவலி ஏற்பட வாய்ப்புண்டு. பெடலை லேசாக காலால் தொட்டவுடனே ஜக்கார்டு பெட்டி தூக்கினால் நெசவளார்களுக்கு சிரமமில்லாமலிருக்கும் என யோசித்து திரு. ரவி 2007 ல் ஜக்காடு பெட்டி தூக்கும் இயந்திரத்தை



வடிவமைத்தார். திரு. ரவி (55) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விட்டு பின்னர் இன்ஜினியரிங் கல்லூரியில் பி.இ. சேர முற்பட்டார். இந்த முயற்சி கைகூட வில்லை. இவர் டி.வி. ரிப்பேரிங்கில் ஆர்வமுடன் செயல்பட்டு வந்தார். ஆடியோ கேசட்டை ரூ.15க்கு செய்து முடிக்க திட்டம் போட்டார். இச்சமயத்தில் டி.டி.கே கேசட் ரூ. 40க்கு வெளியே கிடைத்து வந்தது. ஆனால் அப்பொழுது முதன் முதலில் சி.டி.கேசட் (CD) வெளிவர ஆரம்பிக்கவும் இவர் தனது திட்டத்தை கைவிட்டார். 2007ல் தனது ஊரிலுள்ள நெசவாளர்களின் சிரமங்களைப் போக்க எண்ணி ஜக்காடு பெட்டி தூக்கும் இயந்திரத்தை உருவாக்கினார். இந்த இயந்திரம் 1/4 ஹெ.ச்.பி மோட்டாரால் ஓடும். இதன் விலை ரூ. 21,000. இது வரை 5000 மிஷின்கள் தயாரித்து விநியோகித்துள்ளார். மாதத்திற்கு 100 மெஷின்கள் தயாரிக்கிறார். இந்த மிஷினின் உதிரிப்பாகங்களை தயாரிப்பதில் 30 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பையும் உருவாக்கியுள்ளார்.



பயன்கள்: இந்த மிஷின் மூலம் நெசவாளர்களின் வேலைப்பளு கனிசமாகக் குறைகிறது. காலின் பெருவிரல் மட்டும் பெடலை தொட்டால் போதும் ஜக்கார்டு பெட்டி தானாக தூக்கப்படும். இதனால் முழங்கால், மூட்டுவலி , இடுப்பு வலியிலிருந்து விடுபடலாம். நெசவாளர்களின் நெய்யும் வேகம் கூடுவதால் 8 மணி நேரத்தில் சாதாரண நெசவில் 2 சேலைக்கு பதில் 5–6 சேலைகள் நெய்ய முடியும்.

பி. இரவி
ஆர்.எஸ்.பி.ஜி ஜக்கார்டு இண்டஸ்ட்ரீஸ்
131, கீழாண்டை தெரு
காமக்கூர் அஞ்சல்
ஆரணி தாலுகா
திருவண்ணாமலை மாவட்டம்
செல்: 9488906154

## சூரியசக்தி மூலம் இயங்கும் பட்டு நூல் சுற்றும் கருவி

மணிப்பூர் மாநிலத்தில் பட்டுப்புழு கூட்டிலிருந்து நூல் சுற்றுவதில் பெண்களே ஈடுபடுவர். இந்த பட்டுப்புழு கூட்டிலிருந்து நூல் சுற்றுவதை எளிதாக்க திரு. மணிகார் சர்மா எண்ணினார். இதற்கென 2013ல் பட்டுப்புழு கூட்டு நூல் பிரித்து சுற்றும் கருவியை உருவாக்கினார். இதை இயக்க சூரிய சக்தி கொண்டு செயல்படும் முறையை ஏற்படுத்தினார்.

மணிசர்மா (65) மணிப்பூரில் இம்பாலில் ஒரு மெக்கானிக்காக வேலை பார்த்துவருகிறார். இவர் ஏற்கனவே புதிய உலர்த்தும் கருவி, ஆட்டோமெட்டிக்பம்ப் மூலம் ஓவர் கெட் டேங்கிலிருந்து நீர் எடுத்தல் போன்றவற்றை உருவாக்கியுள்ளார்.

இந்த கருவியை எங்கும் எளிதில் கொண்டு செல்லலாம். இந்த கருவி மூலம் முசுக்கொட்டை, முகா, எரி, டஸ்ஸார் பட்டு புழு கூட்டிலிருந்து பட்டு நூல் பிரித்து சுற்றலாம். கூட்டுப்புழுவின் நூலின் ஒரு முனையை வைத்து கருவியில் ஒட்ட வைத்து விட்டால் தானாக சுழல ஆரம்பிக்கும். சுழலும் வேகத்தை கட்டுப்படுத்தலாம். பீடர் பைப்ஸ் நூல் சுற்றுவதில் இணைக்கபட்டுள்ளன. இது மின்சாரத்திலும் ஓடும்; சூரியசக்தியிலும் இயங்கும். இந்த கருவியினால் மணிப்பூர் பெண்களின் வேலைப்பளு குறைந்து மற்ற வீட்டு வேலைகளை கவனிக்க முடிகிறது.

இவர் 2014ல் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை மூலம் தேசிய விருது பெற்றார்.

நன்றி : தேனீ – ஜூலை– டிசம்பர் 2015

## இயற்கை மஞ்சள் சாகுபடியில் கூடுதல் வருமானம்

மஞ்சளுக்கு இயற்கை வேளாண்மை செய்யும் முறைகளை சென்ற இதழில் (நம் வழி வேளாண்மை அக்டோபர்–டிசம்பர் 2015) பிரசுரித்திருந்தோம். 3 ஏக்கரில் கருக்கம்பாளையம் திரு. செல்லமுத்து மஞ்சள் நடவு செய்திருந்தார். மஞ்சளை பங்குனி மாதத்தில் அறுவடை செய்தார். இதில் 39 குவிண்டால் மகசூல் கிடைத்தது.

செலவு விவரம் ; செலவு (ஏக்கருக்கு) விதை மஞ்சள் ரூ. 37,500, முத்துப்புண்ணாக்கு 10 மூடை ரூ. 10,000, பார் கட்ட கூலி ரூ. 9,000, உழவுக்கு ரூ. 4,000, இடுபொருட்கள் கொண்டு செல்லும் செலவு ரூ. 3,000, இயற்கை உரம், மூலிகை பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்க ரூ. 5,000, தெளிப்பான் மூலம் தெளிக்க (120 டேங்க்) ரூ. 3,600, களையெடுக்க ரூ. 12,000, மஞ்சள் வெட்ட ரூ. 22,000, வேகவைக்க ரூ. 6,000, பாலீஸ் பண்ண ரூ. 4,400, லேபர் செலவு ரூ. 4,000. மொத்த செலவு ரூ. 1,20,500. 3 ஏக்கருக்கு செலவு ரூ. 3,61,500. திரு. செல்லமுத்துக்கு சொந்த நிலம் இல்லை. குத்தகைக்கு நிலம் எடுத்துள்ளார். குத்தகை கூலி 3 ஏக்கருக்கு 12 குவிண்டால் மஞ்சள் கொடுக்கப்பட்டது. மொத்த விளைச்சல் 39 குவிண்டாலில் 12 குவிண்டால் போக 27 குவிண்டால் திரு செல்லமுத்துவிற்கு கிடைத்தது. இயற்கை மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ. 10,000க்கு கேட்கிறார்கள். இயற்கை வழி விவசாயம் செய்யாத விவசாயிகளுக்கு ரூ. 8,900 விலை போகிறது. செல்லமுத்துவின் மஞ்சள் கிழங்கு பெரிதாகவும், குக்குமின் என்ற வேதிப்பொருள் 3.7க்கும் அதிகமாக உள்ளது. இதில் நச்சுப்பொருள் இல்லை. இக்காரணங்களால் இவருடைய மஞ்சளை வாங்குவதற்கு வியாபாரிகள் கூடுதலாக பணம் கொடுக்க முன்வருகின்றனர். ஒரு மூடை விராலி மஞ்சளில் 112 கிலோ மஞ்சள் எடை உள்ளது. மற்ற விவசாயிகளுக்கு ஒரு மூடைக்கு வெறும் 94 கிலோ வரை தான் இருக்கும். இவருக்கு நிகர லாபம் ஏக்கருக்கு ரூ. 8,10,000 கிடைக்க வாய்ப்புள்ளது. இவரிடம் தற்பொழுது இயற்கை மஞ்சள் ஸ்டாக் உள்ளது. தேவைப்படுவோர் இவரை கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

கே.எம்.செல்லமுத்து
கருக்கம்பாளையம்
ஊஞ்சலூர் (அஞ்சல்)
கொடுமுடி (வழி) , ஈரோடு மாவட்டம்.
செல் : 94866 02389

## இயற்கை மக்காச்சோள சாகுபடி

நிலத்தை உழுதபின் ஏக்கருக்கு 5 டிராக்டர் லோடு தொழு உரம் இடவேண்டும். பின்னர் மக்காச்சோள விதை ஊன்றியவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். நீர் பாய்ச்சும் சமயம் அமிர்தக்கரைசல் ஏக்கருக்கு 40 லிட்டர் பாசன நீரில் 15 நாளைக்கு ஒரு தடவை கலந்துவிட வேண்டும். பஞ்சகவ்யா, மூலிகைபூச்சிக்கொல்லி மருந்து 10 நாள் இடைவெளியில் மாறி மாறி 4 முறை தெளிக்க வேண்டும். முதல் முறை பஞ்சகவ்யா, 2வது முறை மூலிகை பூச்சி விரட்டி, 3வது முறை பஞ்சகவ்யா + மூலிகை பூச்சிவிரட்டி, 4வது முறை பஞ்சகவ்யா, 5வது முறை மூலிகை பூச்சிவிரட்டி, 6வது முறை பஞ்சகவ்யா + மூலிகை பூச்சிவிரட்டி என்ற கிரமத்தில் தெளித்துவரலாம்.

இவ்வாறு இயற்கைமுறையில் மக்காச்சோளம் விவசாயம் செய்கின்ற சமயம் பயிர் அறுவடைக்கு வந்தது. ஒரு மூட்டை மக்காச்சோள மணிகளை வியாபாரியிடம் சென்று விற்பதற்கு எடை போட்டார்கள். ஒரு மூடை 127 கிலோ எடை வரை இருந்தது. இயற்கை விவசாயம் செய்யாத பிற விவசாயிகளுக்கு 94 கிலோ எடை வரைதான் இருக்கும். இதனால் கூடுதல் விளைச்சலும் வருமானமும் கிடைக்கும்.

கே.எம்.செல்லமுத்து
கருக்கம்பாளையம்
ஊஞ்சலூர் (அஞ்சல்)
கொடுமுடி (வழி), ஈரோடு மாவட்டம்.
செல் : 94866 02389

## பன்றித் தொல்லையிலிருந்து தப்பிக்க மற்றும் மானவரியில் வருமானம் எடுக்க



ஈரோடு மாவட்டம் பர்கூர் எல்லை ஓரம் கர்நாடகா மாநிலம் சாம்ராஜ் நகர் மலைப்பகுதி கிராமங்களில் விவசாயிகள் சரியாக பயிர் சாகுபடி செய்ய இயலவில்லை. காட்டு பன்றிகள் நிலத்தில் புகுந்து வெள்ளாமையை நாசம் செய்து விடும். இங்கு ராகி பயிர் (கேழ்வரகு) ஆடிப்பட்டத்தில் விதைப்பர். கெட்டிராகி என்ற பாரம்பரிய ரகம் விதைப்பர். இது ஏக்கருக்கு 5 கிலோ அளவில் ஆடி மாதம் விதைப்பர். சாலில் 5 அடி இடைவெளியில் சணப்பை பயிர் செய்வர். சணப்பை ஐப்பசியில் பூ எடுத்து கர்த்திகையில் காயெடுக்கும். மார்கழியில் அறுவடைக்கு வரும். ராகி பயிர் ஐப்பசியில் அறுவடைய்ாகும். கேழ்வரகு 5 மூடை (500 கிலோ) , சணப்பு 2 மூடை (200 கிலோ) மகசூல் கிடைக்கும்.

கேழ்வரகு மூலம் ரூ.15,000 மும், சணப்பு மூலம் ரூ.8000 மும் வரும். சணப்பை விதைகளை நெல்லுக்கு பசுந்தாள் உரச் செடியாக பயிர் செய்ய நல்ல விலை கொடுத்து விவசாயிகள் வாங்கி கொள்கின்றனர்.

கேழ்வரகில் 6 வருடங்களுக்கு முன்னர் துவரை, அவரை ஊடு பயிராக போட்டதில் பூச்சி தாக்குதலும், பன்றி தொல்லையும் இருந்தன. சணப்பை ஊடுபயிராக போடுவதின் மூலம் வருமானமும் கிடைக்கும். பன்றித் தொல்லைகளிலிருந்தும் தப்பிக்கலாம். இதே முறையை சுமார் 200 விவசாயிகள் சாம்ராஜ் நகர் மாவட்டம் கொள்ளேகல் தாலுகாவில் கடம்பூர், ஒட்ர தொட்டி, மட்டெல்லி, பழையமட்டெல்லி, சில்லுவாடி, சந்தனபாளையம், கீரைபதி, நெல்லூர், அன்ஜிபாளையம், பெத்தன்பாளையம், கொள்ளூர், ஊக்யம், ஜடாரபாளையம் போன்ற கிராமங்களில் கடைபிடித்து வருகின்றனர்.

எம். கோபால்
த/பெ. பீம்நாயக்கர்
நால்ரோடு தண்டா
மட்டெள்ளி அஞ்சல், கொள்ளேகல் தாலுகா
சாம்ராஜ்நகர் மாவட்டம், கர்நாடகா மாநிலம்
செல்; 8693939398

தொகுப்பு : அழகுமலை, சேவா

## ஜானி டெஸ்மீரின் கரும்பு கரணை வெட்டும் கருவி



திரு.ஜானி டெஸ்மீர் என்பவர் திருச்சி மாவட்டம், லால்குடி தாலுகாவைச் சேர்ந்த பல்லாபுரம் என்னும் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் பள்ளிப்படிப்பை முடித்து விட்டு சிறு தொழில்

(ஜேடிஇண்டஸ்ட்ரி ) செய்து வருகிறார். விவசாயப் பெரு மக்களுக்கு மிகவும் உதவிகரமாகவும் லாபகரமாகவும் இருக்கக்கூடிய ஏதாவது ஒரு புதிய உத்தி அல்லது கருவியினைக் கண்டுபிடிக்க வேண்டுமென எண்ணினார். அதன் மூலம் முதலில் குறைந்த செலவில் கரும்பில் கரணை வெட்டும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார்.

### கருவி தயாரிக்கும் முறை

மரச்சட்டங்களை ஒன்றினைத்து முதலில் ஒரு சேர் (நாற்காலி) போன்ற ஒரு அமைப்பினை உண்டாக்கினார். பின்னர் அதன் மேற்பரப்பில் சுமார் ஒரு அடி இரும்பு சட்டத்தை வெட்டி எடுத்து அதன் கீழ்ப்பரப்பின் இரண்டுபக்கமும் பொருந்துமாறு சுமார் 8 செ.மீ. நீளமுடைய இரண்டு ஸ்பிரிங் (சுருள் கம்பி) மூலம் இணைத்தார். பின்னர் மேலே உள்ள இரும்பு சட்டத்தின் நடு மையப் பகுதியில் பட்டையான உலோகத் தகடு உருவாக்கி உள்ளார். அதன் (வி அமைப்பு) வி போன்ற அமைப்பில் கூர்மையாக கத்தி போன்ற வெட்டக்கூடிய தன்மையை உருவாக்கி பின்னர் இரும்புச்சட்டத்தில் இணைத்தார். இந்த வி போன்ற பகுதி தான் கரும்பின் கரணையை வெட்டி தனியாக பிரிக்கக் கூடிய அமைப்பு பின்னர் சேர் போன்ற மரத்தாளான மேற்பகுதியிலிருந்து காலால் இயக்கக் கூடிய ஒரு மரத்தாலான கியர் போன்ற அமைப்பை உருவாக்கி, பின்னர் கரணை வெட்டக்கூடிய ஸ்பிரிங் பகுதியையும் இணைத்தார். அதாவது காலால் மிதித்து இயக்கக் கூடிய பகுதியில் காலை வைத்து அழுத்தினால் மேற்பகுதியில் உள்ள கரணை வெட்டும் இரும்பு பிளேடு போன்ற பகுதி சரியாக அதன் கீழ்ப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் கரும்பின் கரணையை வி போன்று வெட்டி தனியாகப் பிரித்து விடும். பின்னர் கரணையை மட்டும் தனியாக ஒரு கூடை அல்லது சாக்கில் பாதுகாத்து பயிரிட எடுத்துச் செல்லலாம். இந்தக் கருவி எல்லா கரும்பு விவசாயிகளுக்கும் காலம்காலமாக உழைக்கக் கூடிய மற்றும் உழைக்ககூடியதாகும். இதை உபயோகப்படுத்துவது மிகவும் எளிமையானது. எந்த வித கரணை சேதாரமும் ஏற்படாது. ஒரு ஆண் அல்லது பெண் விவசாயி மற்றும் போதுமானது. குறைந்த வேலைப்பளு திறன் உடையது. எளிதியில் வயல் வெளிக்கு எடுத்துச் செல்லக் கூடியது. நடைமுறையில் கரணை வெட்டும் கருவி கையால் இயக்க கூடியதாக உள்ளது. இதில் வெட்டுவதற்கு 2 நபர்கள் தேவை. ஆனால் இவருடைய கரணை வெட்டும் கருவியில் வெட்டுவதற்கு ஓர் ஆள் மட்டும் போதுமானது. கையால் வெட்டுவதை விட காலால் வெட்டுவதும் சுலபம். இந்த கட்டர் மூலம் மீதம் எஞ்சியிருக்கும் கரும்புகளை அப்படியே கரும்பாலைக்கு அனுப்பி விடலாம். இதனால் அதிக வருமானம் விவசாயிக்கு கிடைக்கிறது. ஒரு கரணையின் (குருத்தின்) எடை 5 கிராம் முதல் 8 கிராம் வரை இருக்கும்.

### சேமிப்பு

ஒரு கிலோ கரும்புக்கு 50 கிராம் முதல் 80 கிராம் வரை கரணை வெட்ட முடியும். அது போல் 1 டன் கரும்புக்கு 50 கிலோ– 80 கிலோ மட்டும் கரணை வெட்டமுடியும். மரக்கட்டை மூலம் மெஷின் செய்வதற்கு ஆகும் செலவு ரூ. 1000 மட்டும். மேலும் முழுவதும் இரும்பு மூலம் கரணை வெட்டும் மெஷின் செய்ய ஆகும் செலவு ரூ. 2000 மட்டும் ஆகும் என்று ஜானி டெஸ்மீன் கூறினார். இந்த கரும்பு கரணை பிரித்தெடுக்கும் கருவி மூலம் கிடைக்கும் சேமிப்பு ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ. 1 லட்சம், மற்றும் ஒரு ஹெக்டெருக்கு சுமார் 2.5 லட்சம் ரூபாய் கிடைக்கும்.

### ஏ.ஜே.ஆயில் பூச்சி விரட்டி

எல்லா பயிர்களுக்கு ஏற்ற வகையில் ஜானி டிஸ்மீர் ஒரு சிறந்த பூச்சி விரட்டும் ஆயில் ஒன்றை கண்டுபிடித்து உபயோகித்து வருகிறார்.

மிகக்குறைந்த செலவில் தயாரிக்கும் இந்த ஏ.ஜே. ஆயில் அதாவது பூச்சி விரட்டிக்குத் (inseect repellent) தேவையானப் பொருட்கள் கீழ் வருமாறு:

வேப்ப எண்ணெய், புங்க மரத்து எண்ணெய், ஊமத்தைகாய், சாம்பிராணி, கரித்தூள் – மரத்தூள் கலவை.

ஒரு கிலோ பூச்சி விரட்டி தயாரிக்கும் முறை :

கரித்தூள் 400கிராமுடன் 400 கிராம் மரத்தூள் கலந்து கொள்ள வேண்டும். பின்னர் இதனுடன் வேப்பஎண்ணெணை தேவைப்படும் அளவையும் சேர்த்து கலக்க வேண்டும். பின்னர் 200 கிராம் ஒட்டும் பேஸ்ட்டை சேர்க்க வேண்டும். மேலும் இதனுடன் புங்கம் ஆயில், சிறிதளவு மண்ணெண்யை மற்றும் பீ நாரித்தழை, ஊமத்தைகாய் சாறு சேர்த்து நன்றாக கலக்கினால் இந்த பூச்சி விரட்டி ஒரு பேஸ்ட் போலக் கிடைக்கும். அதனை ஒரு அச்சு போன்ற அமைப்பில் ஊற்றினால் உருளை கிடைப்பது தான் இந்த பூச்சி விரட்டி.

### பூச்சி விரட்டும் முறை

ஒரு பூச்சிவிரட்டியை எடுத்துக் கொண்டு அதன் உருண்டையான மேற்புரத்தில் தீயைக் கொழுத்தி காற்றில் மேலும் கீழும் அசைத்தால் புகை நன்றாகப் பற்றிக் கொண்டு வெளி வரும். அந்தப் புகையுடன்

சேர்ந்த விரட்டியை ஒரு சாம்பிராணி தூபம் போடும் தூக்கில் உள் வைத்து பிறகு அதனை வயலின் வரப்பின் மீது நடந்து சென்றும், பின்னர் வயலுக்குள் நடந்து சென்றும் தூபம் காட்டுவது போல அசைத்து புகையை காற்றில் பறக்க விட வேண்டும். இதனால் எந்த வகையான தாய்ப்பூச்சியும் பறந்து விடும். திரும்பவும் வராது. உதாரணமாக கொசுக்கள், அந்துப்பூச்சி மற்றும் அனைத்து வகையான தீமை செய்யும் பூச்சிகளின் தாய்ப்பூச்சிகள் தாக்காது. இதனால் எந்த ஒரு பயிருக்கும் 100 சதவீதம் பாதுகாப்பு கிடைப்பதாக ஜானி கூறுகிறார்.

இந்த பூச்சி விரட்டி உபயோகப்படுத்தும் போது ஒரு வருடத்திற்கு பூச்சிக் கொல்லிக்கு ஆகும் செலவு ரூ. 3000 மிச்சப்படுத்தப்படுகிறது. எந்த விதமான பக்க விளைவுகளும் விவசாயிகளுக்கும் பயிர்களுக்கும் வராது என்று கூறுகிறார். வயலில் காலை அல்லது மாலை நேரங்களில் உபயோகப்படுத்தலாம். இது ஒரு முழுக்க முழுக்க இயற்கை விவசாய முறையாகும். மேலும் முட்டையிடும் பூச்சிகளின் இனம் சிறிது சிறிதாக அழிக்கப்படுகிறது. இதை வயலில் உபயோகப்படுத்தும் பொழுது சுவாசக்கோளாறுகள் எதுவும் வராது.

ஜானிடெஸ்மீர்
ஜேடிஆர் இண்டஸ்ட்ரி, பள்ளபுரம்,
லால்குடி தாலுகா
திருச்சி மாவட்டம்
செல் :9626927599, 9842627521

## கரும்பு தோல் சீவும் கருவி



கரும்பு ஜூஸ் பிழியும் இயந்திரத்தை வைத்து கரும்பு பிழிந்து வருகிறார்கள். பல நகரங்களில் இந்த இயந்திரத்தை சுமார் ரூ. 60,000 க்கு வாங்கி சில தொழிலாளர்கள் ஜீவனம் நடத்தி வருகின்றனர். கரும்பு ஜூஸ் பிழிவதற்கு முன்னர் கரும்பை மேல் தோல் சீவுவார்கள். இந்த வேலையை பெண்டிரே செய்வர். இதற்கு சிரமம் அதிகம். இதனை எளிதாக்க மதுரையில் காயத்ரிபிரசாத் (38) கரும்பு சீவும் கருவியை உருவாக்கியுள்ளார். இக்கருவி 11/2 ஹெச்பி மோட்டார் மூலம் (சிங்கில் பேஸ் மோட்டார்) இயங்குகிறது. கரும்பின் தடிமனுக்கு ஏற்றாற் போல் இதனை அட்ஜஸ்ட் செய்யலாம். 1 நிமிடத்திற்கு 5 கரும்பு வரை சீவலாம். ஆனால் கையினால் சீவினால் 1 நிமிடத்திற்கு 1 கரும்புதான் சீவ முடியும். இதனை ரூ. 30,000 க்கு செய்து கொடுக்கிறார். மோட்டார் இல்லாமல் ரூ. 15,000 க்கு செய்து தரலாம். தோல் சீவப்பட்ட கரும்பு சாறு உப்புத்தன்மையில்லாமல் இனிப்பு அதிகமாக இருக்கும்.

காயத்ரி பிரசாத்
101, இந்திராணிநகர், பிள்ளையார்கோவில் தெரு
முடக்குச்சாலை, மதுரை-16. செல் : 8608181495

## வாசகர் வட்டம்

### இயற்கை காடு வளர்ப்பு

எனக்கு 20 ஏக்கர் பரப்பில் நிலம் உள்ளது. சுமார் 15 வருடங்களுக்கு முன் மரம் வளர்ப்பில் ஈடுபட்டேன். ஒரே கிணறு மட்டும் உள்ளது. நீர் பற்றாக்குறைதான். இதில் பல வகையான மரங்கள், மூலிகை செடிகள் வளர்த்து வருகிறேன். எனக்கு பெரும்பாலான மூலிகை செடிகள் பெயர் தெரியும். அடையாளமும் தெரியும். எங்களுடைய தோட்டத்தில் நெல்லி, சப்போட்டா, நாவல், நாட்டு இலந்தை, கூபாபுல், ஆச்சா, மரமல்லி, இலுப்பை, கருங்காலி, பரம்பை, தொரட்டிமுள், சீத்தாமுள், காவாட்டாம்புல், வெட்டிவேர், கிணாங்குபுல், நன்னாரி, மாகாலிகிழங்கு பயிர் செய்துள்ளேன். இது இயற்கை காடு போல் இருப்பதால் இங்கு கலைமான், மயில், முயல், குரங்குகள், உடும்பு, பாம்பு போன்ற பிராணிகள் வந்து தங்குகின்றன. நான் பல வகையான மூலிகை செடிகள், மரக்கன்றுகள் நர்சரியில் வளர்த்து விநியோகம் செய்கிறேன். மூலிகை கன்றுகள் தேவைப்படுவோர் என்னை அணுகலாம்.

மோகனகிருஷ்ணன்,
டி. களத்தூர், துறையூர் தாலுகா
பெரம்பலூர் மாவட்டம். செல்:9894401680

### கானிக்கு எட்டு வன்னி, கழனிக்கு எட்டு ஆடு

வன்னிமரம் வளரும் இடங்களில் பிற தாவரங்கள் நன்றாக வளரும். இதற்குக் காரணம் மண்ணின் வளத்தையும், தன்மையையும் வன்னிமரம் கூட்டிவிடும். இதனால் தான் ''கானிக்கு எட்டு வன்னி, கழனிக்கு எட்டு ஆடு''. அதாவது நிலத்தின் வளத்தைக் கூட்ட வன்னிமரம். இதேபோல் எட்டு ஆடுகள் வளர்ப்பதால் இதன் எருவும் நிலத்தின் வளத்தைக் கூட்ட உதவும். அரியலூர் பகுதிகளில் தேத்தாங்கொட்டை மரங்கள் அதிகமாக காணப்படுகின்றன. இங்குள்ள குளங்களின் நீரை சுத்தம் செய்யவே இப்பகுதி மக்கள் இந்த மரங்களை உண்டாக்கியிருக்க வேண்டும். நிலத்தில் பாலாட்டங் கொழையை (இலை சிறிதாக இருக்கும், படர்ந்து வளரும்; ஒடித்தால் பால் வரும்) செம்மறி ஆடு தேடிப்போய் சாப்பிடும். இதனை குட்டிகளுக்கும் கட்டுவர். புங்கமரத்தின் பட்டை சாறு ஆறாத புண்ணுக்கு நிவாரணத்தைத் தரும். இதனால் தான் ''புரையோடிய புண்ணுக்கு புங்கம்பட்டை சாறு'' என்று கூறப்படுகிறது.

மோகனகிருஷ்ணன்
2–48 உப்புகிணறு தெரு
டி. களத்தூர் அஞ்சல், துரையூர் வழி
பெரம்பலூர் மாவட்டம், செல்– 9894401680

## எலுமிச்சை முட்டை ரசம்

நான் ஒரு ஏக்கர் நெல் பயிர் செய்துள்ளேன். நெல்லுக்கு குப்பை, தொழுஉரம் போட்டுள்ளேன். நெல் நட்ட 45 வது நாள் கழித்து ஸ்பிரேயர் வைத்து முட்டைரசம் தெளித்தேன். இதனால் கொளை நோய் மற்றும் பூச்சி நோய் வர வில்லை. ஒரு டேங்க் நீருக்கு 150 மி.லி முட்டை ரசத்தை கலந்து தெளிக்க வேண்டும். முட்டை ரசம் தயார் செய்ய 25 எலுமிச்சம்பழங்கள் எடுத்து ஒரு பாத்திரத்தில் சாறு பிழிய வேண்டும். இத்துடன் 250 கிராம் வெல்லம் கலந்து விட வேண்டும். இதில் 10 கோழி முட்டைகளை வைத்து பாத்திரத்தில் மூடி விட வேண்டும். 10 நாட்கள் கழித்து நன்றாக கலக்க வேண்டும். மீண்டும் 10 நாட்கள் பாத்திரத்தை மூடி வைக்க வேண்டும். இதிலிருந்து 150 மி.லி சாறு எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பான் கொண்டு பயிருக்குத் தெளிக்க வேண்டும்.

ஏ.கே.பார்த்திபன்
மெயின்ரோடு, அரசங்குடி, திருவரம்பூர் தாலுகா
திருச்சி மாவட்டம்
செல்: 9952285196

## மண்ணின் தன்மையால் மகசூல் கூடுதல்

மணல்சாரி நிலத்தில் விளைந்த நெல் (எந்த நெல்லாக இருந்தாலும்) களிமண்பூமியில் நாற்று விட்டு, அதே நிலத்தில் நடவு செய்தால் ஓர் ஏக்கரில் விளையும் அந்தநிலத்தில் விளையும் நெல்லை விட 5 மூட்டை கூடுதலாக அதாவது 75 கிலோ நெல் மூட்டை விலையும். அதே போன்று களிமண் நிலத்தில் விளைந்த நெல்லை மணல்சாரி நிலத்தில் நாற்று விட்டு, அதே நிலத்தில் நடவு செய்தால் கூடுதலாக 5 மூட்டை நெல் விளையும் இது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

த.குப்புசாமிசெட்டியார்
கெங்கவரம்
கணக்கன்குப்பம் அஞ்சல்
செஞ்சி தாலுகா
விழுப்புரம் மாவட்டம் – 604151
செல்: 9585854277

### மரங்களை வெட்டாமல் அப்புறப்படுத்துதல்

வீட்டு சுவர்களில் கிணறுகளில், மரம் வெட்டிய இடங்களில் (அந்த இடத்தில் மண்ணை தோண்டி வேரை அப்புறப்படுத்த முடியாத நிலையில்) அந்த மரங்களில் துளிர் விடும் சமயம் தரையிலிருந்து 4 அங்குலம் விட்டு வெட்டி விட வேண்டும். அந்த செடியோ, மரமோ துளிர்விடும் சமயங்களிலெல்லாம் அதன் துளிர்களை கையால் ஒடித்து வர வேண்டும். அந்த மரமோ செடியோ ஒளி சேர்க்கை ஏற்படாமல் பட்டு விடும். துளிர் விடும் சமயங்களில் எல்லாம் கையால் கிள்ளி எறிந்து விடலாம். இதற்காக கட்டிடத்தை இடிக்க வேண்டியதில்லை. பெரிய மரங்களை வெட்டும் சமயம் அந்த இடத்தில் மண்ணை அப்புறப்படுத்த முடியாத நிலையில் இப்படி செய்து வந்தால் அந்த மரம் பட்டு விடும். எனது அனுபவத்தில் சோதித்த மரங்கள் அரசமரம், ஆலமரம், வேம்பு, பூவரசு ஆகும். இந்த முறையை மற்ற மரங்களுக்கும் பயன்படுத்தலாம். எனது அனுபவம் அந்த மரத்தின் வேர்கள் மண்ணுக்கு உள்ளேயே மக்கிவிடும்.

த.குப்புசாமிசெட்டியார்
கெங்கவரம்
கணக்கன்குப்பம் அஞ்சல், செஞ்சி தாலுகா
விழுப்புரம் மாவட்டம் – 604151, செல்: 9585854277

## பலாபழத்தில் காவாத்து

பலாமரம் காய்ப்புக்கு வந்தவுடன் அனைத்து பிஞ்சு காய்களையும் அப்படியே காய்ப்புக்கு விடக் கூடாது. ஒரு வருடம் ஆன மரத்திற்கு 2 பழம் என்ற கணக்கில் பிற

பிஞ்சுகாய்களை நீக்க வேண்டும். இதனால் காய்க்கும் பழத்தின் அளவு கூடி வரும். 15 கிலோவுக்கு குறையாத பழங்களாக வரும் பழங்களை விற்பனைக்கு அனுப்பினால் நல்ல விலை கிடைக்கும். இடைத்தரகர்கள் பழத்திற்கு ரூ. 50– ரூ75 வரை கொடுப்பர். இதே பழங்கள் சந்தையில் இரட்டிப்பாக விற்கப்படும். பலா நட்டு ஒரு ஏக்கரில் ரூ. 60,000 சராசரி வருமானம் எடுக்கலாம். பலா மரங்களினால் நிலத்தடி நீர் கூடும். இதன் இலைகளை ஆடுகள் சாப்பிடும். வீட்டிற்கு பழமும் குடும்பத்திற்கு வருமானமும் கிடைக்கும். 30 வருடங்களான பின் மரத்தை வெட்டும் சமயம் மரத்திற்கு ரூ. 10,000 கிடைக்கும்.

நன்றி : மறக்கப்பட்ட கற்பகத்தரு (Forgotten Kalavtuksha) – ஸ்ரீ பத்ரி

Centre for Innovation in science and social Action , MBC- 27, Museum Bains Compound, Nanthancode, Kowdiar PO, Thiruvananthapuram - 695 003

## பல்லுயிர் பன்மயத்தை அழிவிலிருந்து காப்பாற்றுதல்

குஜராத்தில் திசோ என்ற இடத்தில் ஆயுர்வேத வைத்யசாலை வைத்திருக்கின்றோம். இப்பகுதியில் பாலாகொடி என்ற மருத்துவ குணம் வாய்ந்த மூலிகை தாவரம் தற்போது கிடைப்பது அரிதாக உள்ளது. இதே போல் வட்சா, சாவுதா என்ற மூலிகை தாவரங்களும் கிடைப்பது அரிதாக உள்ளது. இந்த மூலிகை செடிகளை எங்கள் நாற்றங்காலில் வருடத்திற்கு 2,500 – 3000 வரை உற்பத்தி செய்து மக்களுக்கு இலவசமாக கொடுத்து வருகின்றோம். இளைஞர்கள் மூலம் பல இடங்களில் நட்டு வருகிறோம்.

இளைஞர்கள் மூலம் நாட்டு மர விதைகள், மூலிகை செடிகளின் விதைகள் சேகரித்து காடுகளில் குழி தொண்டி அதில் மண் போட்டு மூடி விடுவோம். இதனால் மழை காலங்களில் முளைத்து வந்து விடும். கோடை காலத்தில் வீடுகளிலிருந்து மாம்பழ கொட்டைகளை சேகரிக்கிறோம். இந்த கொட்டைகளை யார் வனத்தில் அதிக தூரம் எரிகின்றார்களே அவர்களுக்கு பரிசு வழங்குகிறோம். இவ்வாறு எரியப்பட்ட கொட்டைகள் மரங்களாக வளர்ந்து வனத்தை செழுமையாக்கும்.

தேனீ – ஜூலை – டிசம்பர் 2015

## இரத்த விருத்திக்கு

நம் வழி வேளாண்மை ஜூலை – செப்டம்பர் – 2015 இதழில் இரத்த சோகைக்கு முகம்மது உசைனின் மூலிகை வைத்தியத்தை படித்து பார்த்தேன். இதன்படி இவர் கூறிய படி வைத்யத்தை கடைபிடிக்க முடிவு செய்தேன். எனக்கு ஆரோக்யக்குறைவால் உடம்பு மிகவும் இளைத்திருந்தது. 40 கிலோ எடை இருந்தது. கடந்த சில மாதங்களாக நெல்லிக்காய் 1 (நறுக்கியது), பேரீச்சம்பழம் 1, பாதாம்பருப்பு 2 (உடைத்தது) இதனை இரவில் தனித்தனியாக நீரில் ஊறல் போட்டு காலையில் அருந்தி வந்தேன். இது போக ஊட்டம் தரும் உணவையும் சேர்த்து வந்தேன் . தற்பொழுது 50 கிலோ எடையாக கூடி விட்டது.

சந்திரசேகர்
1, சர்ச் தெரு, விளாங்குடி
மதுரை, செல்– 8056279996

## நாட்டு ரக விதைகள்

நாட்டுத்தக்காளி ரகம், மரத்துவரை, குத்து அவரை, நாட்டு பாசியறு, வம்பன் பாசிப்பயறு, வம்பன் உளுந்து, கோ–7 தட்டைப்பயறு, கோ– சி.பி. 7–துவரை இயற்கையாக சாகுபடி செய்து விதைகளை விநியோகம் செய்து வருகிறேன்.

பி.ஆர். சுப்ரமணியன்
பட்டக்காரன்புதூர்
அன்னூர் மேட்டுப்பாளையம் அஞ்சல், வழி
கோயம்புத்தூர் மாவட்டம்
செல்: 9894505188

## இயற்கை முறையில் பருத்தி சாகுபடிக்கு ஒப்பந்தம்

நாட்டு பருத்தியை விதையை விவசாயிகளுக்கு கொடுத்து பருத்தியை நாங்களே கொள்முதல் செய்கிறோம். இந்த பருத்தி 6 மாதம் மற்றும் இரு போகமாகவும் பயிரை கொண்டு சென்றால் 1 வருடம் வரை பருத்தி காய்க்கும். இயற்கை முறையில் பருத்தி விவசாயம் செய்ய ஆலோசனை கூறுகின்றனர். இந்த நாட்டு பருத்தி மூலம் ஏக்கருக்கு 8–9 குவிண்டால் மகசூல் கிடைக்கும். குவிண்டால் விலை சுமார் ரூ. 5,000 வாக்கில் கொள்முதல் செய்வர். ஏக்கருக்கு 3 கிலோ விதை கொடுப்போம்.

திரு. செல்வம்
நாட்டு பருத்தி விவசாய பண்ணை
ஆத்தூர் , சேலம் மாவட்டம்
செல் : 9486340838

நன்றி : பசுமை விகடன்

## தக்காளி பயிர் செழித்து வளர

தக்காளி செடி நடுவதற்கு முன் உழவு செய்யவேண்டும். ஒவ்வொரு முறையும் களைகளை கட்டுப்படுத்த நீர் விட வேண்டும். மண் ஈர தன்மையை வைத்து களைகள் முளைத்துவிடும். அதன்பின் உழவு செய்வது அவசியம். நான்கு முறை உழவுசெய்யும் போது களைகள் கட்டுப்படும். 10 நாளுக்கு ஒரு தடவை 4 நாள் கழித்து 2 மாதத்தில் 4 தடவை உழ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் களை எடுக்கும் செலவு வராது. பின்னர் நடவு செய்வது மிக அவசியம். வெயில்காலங்களில் செய்யும்போது பூ நிற்காது என்பார்கள். நான் மறுசுழற்சி முறையில் லாபம் எடுத்து இருக்கிறேன். எப்படி என்றால் வாரத்திற்கு மூன்று முறை ஐஸ் கட்டி சுமார் 2 கிலோ எடுத்து தழைக்கேற்ற நீருடன் கலந்தும் மாலை வேளையில் தெளிக்கவேண்டும். மழை பெய்தால் எப்படி இருக்குமோ அப்படி பயிர் செழித்து வளரும்.

பி.ஆர். சுப்ரமணியன்
பட்டக்காரன்புதூர்,அன்னூர் மேட்டுப்பாளையம் அஞ்சல்,
கோயம்புத்தூர் மாவட்டம்
செல்: 9894505188

## இயற்கை விதை நேர்த்தி

சோளம், தட்டைபயிர், துவரை, பாசிபயிறு விதைகளுக்கு நாம் விதை நேர்த்தி செய்த பின் விதைக்கவேண்டும். மாட்டுக்கோமியத்துடன் சுமார் 10 லிட்டர் (மானாவாரி விதைப்புக்கு) 5 லிட்டர் சுத்தமான நீர் கலந்து பத்து நாட்கள் வைத்தபின் ஒவ்வொரு விதைக்கு தலா 10 கிலோ விதைக்கு 1 லிட்டர் கோமியம் கலந்த நீர் பயன்படுத்தவும். விதையை சுமார் 10 நிமிடம் நிழலில் வைத்து விதைக்க வேண்டும். பயிர்கள் நன்றாக செழித்த வளரும். வறட்சியை தாங்கி வரும்.

பயிர்களுக்கு ஒரு மாதம் கழித்து பயிர் பாதுகாப்பு மிகவும் அவசியம். அதற்கு பஞ்சகவ்யம் ஒரு லிட்டருக்கு 10 லிட்டர் நீர் கலந்து ஒரு ஏக்கருக்கு தேவையான அளவு தெளிக்க வேண்டும். பயிர்கள் நன்கு செழித்து வளரும். அஸ்வினி சாறு உறிஞ்சும் நாவாய்ப் பூச்சிகளுக்கு பூண்டு அரை கிலோ, இஞ்சி கால்கிலோ சேர்த்து அரைத்து சுமார் 5 லிட்டர் நீரில் கலக்கவும். இத்துடன் வேப்பஎண்ணை அரை கிலோ சேர்த்து நன்கு கலந்து சுமார் 10 நாட்கள் மண் சட்டியில் வைக்கவும். பூச்சி தென்படும்போது அரை லிட்டர் நீருடன் 10 லிட்டர் நீர் சேர்த்து தெளிக்கவும். பூச்சிகள் வராது.

பி.ஆர். சுப்ரமணியன்

## வனவிலங்கினால் மரங்கள் பாதிப்பு

எங்கள் ஊரில் ஒரு விவசாயியின் தோட்டத்தில் இலுப்பை மரம் ஒன்று இருந்தது. இந்த மரத்திலிருந்து வருடத்திற்று ரூ. 6,000 கிடைத்துவந்தது. இலுப்பை விதையிலிருந்து 60 லிட்டர் எண்ணெய் எடுப்பார். இதன்மதிப்பு ரூ. 6,000. ஆனால் கடந்த வருடம் இந்த மரத்தில் குரங்குகள் வந்து தங்கி பயிரை நாசம் செய்ததால் மரத்தை வெட்டிவிட்டார். குரங்கு, மயில் போன்றவற்றால் விவசாயப் பயிருக்கு சேதம் விளைகின்றது. இதனால் பல விவசாயிகள் தோட்டத்தில் உள்ள மரங்களை வெட்டிவிடுகின்றனர்.

மோகனகிருஷ்ணன்
டி.களத்தூர், பெரம்பலூர் மாவட்டம்.

## மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் இயற்கை பண்ணை



திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி ஊரானது மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள நகரமாகும். இவ்வூரில் அந்தோணிசாமி பல வருடங்களாக இயற்கை முறையில் கரும்பு, எலுமிச்சை, நெல், காய்கறி சாகுபடி செய்துவருகிறார்.

உரத்திற்காக நாட்டு மாடுகளான ஓங்கோல், மலைமாடு 100 மாடுகளுக்கும் அதிகமாக பராமரித்து வருகிறார். இவர் மலையடிவாரத்தில் சுமார் 100 ஏக்கருக்கும் அதிகமாக நிலப்பரப்பில் செஞ்சந்தனம், தேக்கு போன்ற

மர வகைகளை உண்டாக்கியுள்ளார். நிலத்தைச் சுற்றி மின்சாரமுள்வேலி அமைத்து காட்டுமிருகங்களின் தொல்லையிலிருந்து பாதுகாத்து வருகிறார். செஞ்சந்தன மரங்கள் 10 வருடங்களுக்கும் மேலான வயதுடையது. இதற்கு பிற்காலத்தில் நல்ல விலை கிடைக்கும் என்று நம்புகிறார். இப்பகுதியில் மலை நீரைத் தேக்க 5 ஊருணிகள், 10 தடுப்பணைகள் அரசு உதவியுடன் கட்டியுள்ளார். இதனால் இப்பகுதியில் சுமார் 300 ஏக்கர் நிலங்களுக்கு கிணற்றுநீர் ஊற்று உருவாகி விவசாயத்திற்கு கை கொடுக்கிறது. இதுபோக ஊரிலிருந்து மலையடிவாரத்திற்கு செல்வதற்கு தார்ச்சாலை ஏற்படுத்தி பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் வனத்துறையினருக்கும் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துள்ளார்.

அந்தோணிசாமி
சிந்தாமணி
புளியங்குடி
திருநெல்வேலி மாவட்டம்.
செல் : 9443582076

## மாணவர்களின் யோசனைகள் / உத்திகள்

தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை ( National Innovation Foundation ) என்பது மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையில் தன்னிச்சையாக செயல்படும் நிறுவனமாகும் . இக்னைட் என்ற போட்டியை தேசிய அளவில் மாணவர்களிடம் ஏற்படுத்தி மாணவர்களின் புதிய கண்டுபிடிக்கும் திறமையை வெளிக்கொணர ஊக்குவிக்கிறது. +2 வரை படிக்கும் எந்த பள்ளி வகுப்பு மாணவராக இருப்பினும் இதில் கலந்து கொள்ளலாம். பள்ளி மாணவர்களின் சுயமான கண்டுபிடிப்புகள் அல்லது யோசனைகள் உத்திகளை வரவேற்கிறோம். இந்த கண்டுபிடிப்புகள் யோசனைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31–08–2016 . கண்டுபிடிப்பு அல்லது யோசனையின் முழு விளக்கத்துடன் மாணவரின் பெயர், வயது, வகுப்பு, பள்ளியின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி எண் விவரங்களுடன் தபாலில் அல்லது மின்னஞ்சலில் **ignite16@nifindia.org** என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். சிறந்த கண்டுபிடிப்புகள் முன்னாள் ஜனாதிபதி மாண்பு மிகு டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளான 15–10 –2016 அன்று அறிவிக்கப்படும் . மிகச்சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பதிவுரிமையை மாணவர்களின் பெயரில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்படும். போட்டியைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும் சென்ற ஆண்டுகளில் யார் யார் எந்த கண்டுபிடிப்புகளுக்காக பரிசு பெற்றது பதிவுரிமை செய்யப்பட்டது போன்ற விவர அறிய **http://nif.org.in/ignite/ignite/ignite_announcement.php** என்ற இணையதளத்தைப் பார்க்கலாம். தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி :

National Innovation Foundation , Satellite Complex , Premchand Nagar Road,
Ahmedabad – 380015, Gujarat ,
Phone : 079 – 26732456, 2095 ,
Fax : 079 – 26731903
Email : ignite12@nifindia.org
Website : www.nifindia.org

சென்ற ஆண்டு மாணவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்பட்ட சில யோசனைகள் பின்வருமாறு:

### மாடுகளுக்கு காயம் ஏற்பட்டு விட்டால்



மாடுகளுக்கு ஏதாவது குத்தி காயம் ஏற்பட்டு இரத்தம் கசிந்தாலோ அதனை உடனே நிறுத்துவதற்கு சென்சார் மூலம் அறிந்து கொண்டு செயல்படலாம். பிளஸ் டூ படிக்கும் மாணவி திவா (ஜி.டி. கோயங்கோ பப்ளிக் ஸ்கூல், புதுதில்லி) வின் யோசனைப்படி மாடுகளுக்கு சென்சார் பொருத்தப்பட்ட அங்கியை மேலே போட்டு கட்டிவிட வேண்டும். ஒரு கம்ப்யூட்டர் அப்ளிகேசன் மூலம் மாட்டின் சுவாசம், உடலின் உஷ்ணம், நாடித்துடிப்பு, இருதயதுடிப்பு போன்றவற்றை உடனடியாக மருத்துவர் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. இதனால் இரத்தக் கசிவு அல்லது காயம் ஏற்பட்டால் உடனே மருந்து கொடுத்து காப்பற்றலாம்.

## இலுப்பை மர பூக்களைப் பொறுக்க



ஒடிஸ்ஸாவில் காம்கால்ன் ஊரில் அரசு உயர்நிலைப்பள்ளியில் 10 வது வகுப்பு படிக்கும் விப்ஸா பிரதான் என்ற மாணவி இலுப்பை மர பூக்களை தரையிலிருந்து சேகரிக்க ஒரு கருவியை உருவாக்கியுள்ளார். இலுப்பை மரத்திலிருந்து கொட்டும் பூக்களை தன்னுடைய அம்மாவும் பிற பெண்களும் பொறுக்கி வருவதைப் பார்த்து வந்தார். அவர்கள் படும் சிரமங்களையும் அறிந்தார். இந்தப்பூக்கலிருந்து ஊறுகாய், ஜாம், இனிப்பு பதார்த்தங்கள் செய்வர். பெண்கள் கையால் பொறுக்காமல் கருவியை வடிவமைக்கும் யோசனையை கூறியுள்ளார்.

## சூரியசக்தி விதைப்பான்



சுபாஸ் சந்திரபோஸ் என்ற 8 வது வகுப்பு மாணவன் (புனித செபஸ்தியார் மெட்ரிகுலேசன் பள்ளி புதுக்கோட்டை) விதைகளை தகுந்த இடைவெளியில் மற்றும் தகுந்த ஆழத்தில் விதைக்கும் கருவியை வடிவமைத்துள்ளார். இதற்கான ஆற்றலை சூரிய சக்தி மூலம் பெறலாம் என்று கூறுகிறார்.

## உணவு பொருளில் அந்நிய பொருட்கள் இருப்பதை கண்டறிதல்



டௌசீப் என்ற 10 வது வகுப்பு மாணவன் (அரசு மேல் நிலைப்பள்ளி, குல்காம், காஷ்மீர்) உணவை சமைக்கு முன்னர் குக்கர் போன்ற பாத்திரத்தில் அரிசி போன்றவற்றை இட்டு ஒரு டெஸ்ட் மானியை நுழைத்தால் அதில் கற்களோ, பூச்சியோ இருந்தால் அறிகுறி காட்டிவிடும். பின்னர் சுத்தம் செய்து சமைக்க ஆரம்பிக்கலாம் என்று கூறுகிறார்.

நன்றி : தேனீ –ஜூலை – டிசம்பர் 2015